Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 210

புதன்கிழமை
24 ஜூன் 2026

ஆனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
சிவமயம்



ஈழத்து சைவ வரலாற்றில் ஒரு புதிய மைல்கள்: கொக்குவில் விசாலாட்சி உடனுறை

# காசிவிசுவநாதர் திருக்கோயில் "பெரிய நந்தி" திருக்குட நன்னீராட்டு !

## தோற்றுவாயும் ஆலய வரலாறும்

ஈழத்துச் சைவப் பெருநிலத்தின் ஆன்மீக இதயமாக விளங்கும் யாழ்ப் பாணத்து மண்ணில், கலைகளும் சமயப் பண்பாடும் தழைத்தோங்கும் கொக்குவில் கிழக்குப் பதியில், அருள்வடிவமாய் எழுந்து நிற்கிறது. **"யாழ்விஷன் இந்துமன்றத்தின் அருள் மிகு விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதர் திருக்கோயில்".** இப் பகுதியின் அடியார் பெரு மக்களுக்குப் பத்திப் பேற்றினையும் ஆன்மீகச் சேவைகளையும் நல்கும் உயரிய நோக்குடன், **சிவத்திரு. கந்தையா சுசீந்திரன் மற்றும் திருமதி. அருணா சுசீந்திரன்** குடும்பத்தினரின் இறை சிந்தையின் விளைவால் தோற்றம் பெற்ற யாழ்விஷன் இந்து மன்றம், எம் பெருமானுக்கு ஓர் உன்னத ஆலயத்தை அமைக்கத் திருவுள்ளம் கொண்டது. அதன்பொருட்டு, 2010 ஆம் ஆண்டு கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையாக தொடங்கப்பட்ட யாழ்விஷன் இந்து மன்றத்தில் முதன் முதலாக கடந்த 10.12.2021 (பிலவ வருடம் கார்த்திகைத் திங்கள் 24 ஆம் நாள்) வெள்ளிக்கிழமை, சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் விசாலாட்சி அம்மை உடனுறை காசி விசுவநாதப் பெருமானுக்குத் தொடக்க காலக் திருக்குட நன்னீராட்டு மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 01.11.2021 அன்று அன்பகம் ஆன்மீக நிலையம் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டு, இவ்வூர் மக்களின் வழிபாட்டுப் புகலிடமாகவும், ஆன்மீகச் சேவைகளின் மையமாகவும் இத்திருத்தலம் விளங்கி வருகின்றது.

## காசியின் சிறப்பும் அண்ணாமலையாரின் மகிமையும்

சிவபெருமான் உறைவிடமாகக் கொண்ட திருத்தலங்களுள், காலத்தால் மூத்த முத்தித் தலமாக விளங்குவது காசி மாநகரமாகும். "காசியில் இறக்க முத்தி" என்பார்கள். அண்ட சராசரங்களையும் இயக்கும் விசுவ நாதப் பெருமானும், அகிலத்தைக் காக்கும் அன்னை விசாலாட்சியும் அங்கே வீற்றிருந்து, கங்கைக் கரையில் அடியார்களின் வினைகளைத் தீர்க்கின்றார்கள். அந்த உன்னதமான காசித் தலத்தின் திருவருளை அப் படியே ஈழத்து மண்ணில் அடியார்கள் உணரும் வண்ணம், இங்கு விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதர் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது பெரும் பாக்கியமாகும். அதேவேளை, "நினைத்தாலே முத்தி தரும் திருவண்ணாமலையில்", எம்பெருமான் அணுக்கத் தொண்டனாம் நந்தியெம்பெருமானுக்குத் தனது சோதிப் பெருவடிவத்தைக் காட்டி அருளினார். அந்த அண்ணா மலையாரின் பேராற்றலையும், அங்கே மலையையே சிவமாக வணங்கும் ஐதீகத்தையும் நினைவுபடுத்தும் வகையில், இத்திருக்கோயிலும் ஆன் மீகப் பேரொளியைத் தன்னுள் கொண்டு திகழ்கிறது. காசியின் ஞான மும் அண்ணாமலையின் சோதிப் பிழம்பும் இணையும் ஒரு மகா சிவத்தலமாக இக்கோயில் உருப்பெற்றுள்ளது.

## கற்கோயில் திருப்பணிகளும் மகாலிங்க வழிபாட்டு மகிமையும்

ஆரம்பிக்கப்பட்ட சில வருடங்களி லேயே இத்திருத்தலத்தைக் காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கும் ஒரு கற்கோயிலாக (கருங்கல் திருத்தலமாக) மாற்றும் மாபெரும் திருப்பணி தொடங்கப்பட்டது.

### முழுமையான கருங்கல் வடிவ மைப்பு (2024):

இத்திருக்கோயிலானது முழுமையாகக் கருங்கல்லால் புத்தெழில் கோலத்தில் வடிவமைக்கப்பட்டது. ஆலயத்தின் இராசகோபுரம், நடராசர் அலங்கார மண்டபம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கான பெருந் திருக்குட நன்னீராட்டு (மஹா கும்பாபிஷேகம்) கடந்த 24.03.2024 (சோபகிருது வருடம் பங்குனித் திங்கள் 11 ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை மிக விமர்சையாக நடைபெற்றது. இக்கோயிலின் விசேட அம்சமாக, இலங்கையில் முதன்முறையாக 108 **சிவதாண்டவப் பாவனைகளைத் தாங்கிய பேரெழில் கருங்கல் அலங்காரத் தூண்களின் வரிசை** அமையப் பெற்றுள்ளமை அடியார்களை வியப்பில் ஆழ்த்துகிறது. மேலும், இக்கோயிலுக்கான மூல மூர்த்திகளின் பளிங்குக்கல் இறைத்திரு மேனிகள் அனைத்தும் மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**•அடியார் கரங்களால் நீராட்டும் மகாலிங்கம் (2025):** ஆலயத்தின் இறைமகிமையை மேலும் உயர்த்தும் வண்ணம், கடந்த **2025 ஆம் ஆண்டு பெருஞ்சிவனிரவு (மகா சிவராத்திரி)** நன்னாளில், அடியார் பெருமக்கள் தங்களின் சொந்தத் திருக் கரங்களினால் நீர் ஊற்றி வழி பாடாற்றக் கூடிய வகையில் ஒரு "மகாலிங்கத் திரு மேனி" நிலைப் படுத்தல் செய்யப்பட்டு திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டது. திருத்தேர் வடிவில் பேரெழிலோடு விளங்கும் கருங்கல் நாற்தூண் மண்டபத்தில் இந்த இலிங்கத் திருமேனி நிலைப்படுத்தப்பட்டுள்ளது. சாதி, மத, வயது பேதமின்றி சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் எம் பெருமானைத் தங்கள் கரங்களால் திரு மஞ்சனம் (அபிஷேகம் செய்து பேறு பெறும் உன்னத வழிபாட்டு முறை இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.)

## "பெரிய நந்தியின்" சிறப்பும் கருங்கல் நுழைவாயில் தோற்றமும்

சைவ நெறியில் நந்தியெம்பெருமான் வெறும் வாகனமல்ல, அவர் சிவகணங்களின் தலைவர், முதல் குரு, மற்றும் தூய ஆன்மாவின் குறியீடு. **"நந்தி அனுமதியின்றி நல்நகர் புகலாகாது"** என்ற வாக்கின் படி, எம் பெருமானை தரிசிக்கும் முன் நந்தியின் திருவருளைப் பெறுவது மரபு. நினைத்தாலே முத்தி தரும் திருவண்ணாமலையில் **"பெரிய நந்தி"** என்ற திருப்பெயரில் நந்தியெம்பெருமான் பிரம்மாண்டமாக வீற்றிருந்து அருள்வதைப் போல, கொக்குவில் பதியிலும் **"பெரிய நந்தி"** என்ற திருப் பெயரிலேயே இத்திருமேனி அமையப் பெற்றுள்ளது இதன் ஆகச்சிறந்த தனித்துவமாகும். **சிற்ப அமைப்பின் பிரம்மாண்டம்:** இவ்வியத்தகு பெரிய நந்திப் பெருமானின் திருப்பணிகளுக்குக் கடந்த 12.07.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து, **25,000 தொன் எடையுள்ள ஒரே பாறைக் கல்லானது கோவிற்குளம் கோயில்மலையில் 15 அடி ஆழத்தில் தோண்டி எடுத்து கொண்டுவரப்பட்டு, 18,000 தொன் எடையோடு, 7 அடி 5 அங்குலம் உயரமும் 4 அடி 1 அங்குலம் அகலமும் 9 அடி 1 அங்குலம் கொண்டதாக** நந்தியெம் பெருமான் வடிவமைக்கப்பட்டு, கடந்த 25.05.2026 அன்று ஆலய முன்றலில் நிலைப்படுத்தப்பட்டார். இக்கருங்கல் திருப்பணிகள் அனைத்தும் சித்தி விநாயகர் சிற்பாலய சிற்பாசாரியார்கள் ரவி மற்றும் நீலராஜ் குழுவினரின் முனைப்பான செயல்திறனால் செவ்வெனே நிறைவேறியுள்ளது. மேலும், இங்கு புத்தெழில் கோலத்தில் அமையப்பெற்ற 20 அடி உயரமான மகரபட்சி அமைப்புடைய, கருங் கல்லாலான தோரண வாசல் நுழை வாயிலும் சிறப்புக்குரியதாகும்.

## பெரிய நந்தி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா - 2026

இத்தகைய வரலாற்றுப் பெருமை மிக்க பெரிய நந்தி பெருமானுக்கான **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா (மஹா கும்பாபிஷேகம்) வருகின்ற 25.06.2026 அன்று மிக பிரம்மாண்டமாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.**

### விழாக்காலக் கிரியை விபரங்கள்:

**24-06-2026 (புதன்கிழமை):** காலை 09:00 மணியளவில் பூர்வாங்கப் பூசைகள் மற்றும் யாகசாலைக் கிரியைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து அன்றைய தினம் பகல் 12:00 மணி முதல் இரவு 07:00 மணி வரை அடியார்கள் இறைமேனிகளுக்கு எண்ணெய் சாத்தும் எண்ணெய்க்காப்பு திருவிழா நடைபெறும். 25-06-2026 (வியாழக் கிழமை - மங்கள பராபவ வருடம் ஆனி 11 ஆம் நாள்): ஏகாதசி திதியும், அமிர்த சித்த யோகமும், சுவாதி நட்சத்திரமும் நிறைந்த சுபதினத்தில், 19 அடி 2 அங்குலம் அகலமும், 24 அடி 2 அங்குலம் நீளமும், 18 அடி உயரமும் கொண்ட பிரம்மாண்ட கருங்கல் கொடுங்க மண்டபத்தில் எழுந்தருளியுள்ள "பெரிய நந்தி" பெருமானுக்குக் காலை 07:28 மணிக்கு விசேட யாகங்கள், வசந்த மண்டபப் பூசைகள் நடைபெறும். தொடர்ந்து இறையருள் கூடிய விடைவான் நல்வேளையில் காலை 09:47 மணிக்கு கருங்கல்லிலான பெரிய நந்திப் பெருமானுக்கு சிறப்பு திருமஞ்சனங்கள் இடம்பெற்று, செல்வ கணபதி, கலை வாணி தேவி ஆகிய மூர்த்திகளுக்கு பெருந் திருக்குட நன்னீராட்டு (மஹா கும்பாபிஷேகம்) விமர்சையாகத் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2ம் பக்க தொடர்ச்சி

சிவமயம்



## குடமுழுக்கு விழா விருந்தினர்களும் சிவாச்சாரியார்களும்

இவ்விழாவிற்கு விண்ணுலகில் இருந்து ஆசி வழங்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடனும் தருமபுர ஆதீன குருமகா சந்நிதானத்தின் திருவருள் ஆசியுடனும் பின்வரும் பெரியோர்கள் நேரில் கலந்து சிறப்பிக்கின்றனர்:

- **முனைவர் சீர்வளர்சீர் மௌன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் (தருமபுர ஆதீனம்)**
- **தவத்திரு. வேலன் சுவாமிகள் (ஆதீன முதல்வர். சிவகுரு ஆதீனம். நல்லூர்)**
- **சிவஸ்ரீ.சுந்தரேஸ்வர குருக்கள் (ஆதீன கர்த்தா. ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானம்)**

## முடிவுரை

ஈழத்துச் சைவ வரலாற்றில் கருங் கல்லால் மிகப் பெரிய அளவில் அமையப் பெற்று, அடியார்களே திரு மஞ்சனம் செய்யும் மகாலிங்கத்தையும், திசை நோக்கிப் பாயும் 18.000 தொன் எடையுள்ள "பெரிய நந்தி பெருமானையும் கொண்ட ஒரு தலம் உருவாவது இதுவே முதல் முறையாகும். கொக்குவில் கிழக்கு யாழ்விஷன் இந்துமன்றத்தின் இந்த உன்னத ஆன் மீகப் பணி என்றும் போற்றத்தக்கது. வருகின்ற 25.06.2026 அன்று நடைபெறவுள்ள இப்புனித நன்னீராட்டுப் பெருவிழாவில் உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு. அன்னை விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதரின் திருவருளையும். பெரியநந்திப் பெருமானின் அருட்காவலையும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

நன்றே நலம் தரும் நந்தியெம் பெருமானை வணங்கி நாளும் இன்புறுவோம்!

**திருச்சிற்றம்பலம்**
**இறைபணியிலுள்ள,**
**சிவத்திரு. கந்தையா சுசீந்திரன், திருமதி. அருணா சுசீந்திரன் குடும்பத்தினர்**
**(ஆலய தர்மகர்த்தாக்கள்) யாழ்விஷன் இந்துமாமன்றம்**

## ஆலயக் குருமார்கள்:

.பிரதிஷ்டா பிரதம குரு: "சிவகாம கிரியா கீர்த்தி" சிவஸ்ரீமணி செந்தில் நாத ரிஷாந்த குருக்கள் (ஸ்தானிக குரு. சூறாவத்தை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம்).

. ஆலய தலைமைக்குரு: பிரம்மஸ்ரீ செ. குகேஸ்வர சர்மா மற்றும் உதவிக் குரு பிரம்மஸ்ரீ சயந்தன் சர்மா.

## கலை நிகழ்வுச் சிறப்பு:

விழாவினை முன்னிட்டு. தென்னிந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் ஸ்ரீமதி. மதுமிதா அவர்களின் பக்தி இசைக்கச்சேரி அடியார்களை பக்தி வெள்ளத்தில் திளைக்க வைக்கவுள்ளது. தொடர்ந்து அடியார்களுக்குப் பெருமளவில் அமுது செய்வித்தலுடன் (அன்னதானம்) விழா நிறைவுபெறும்.



## தருமபுரம் ஆதீனக் கட்டளை விசாரணை, முனைவர் சீர்வளர்சீர் மௌன திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகளின் ஆசிச் செய்தி

"ஆதியிலும் திருநந்தி அனாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒரு கோடி போதாவே" - ஞானக்கூத்தர்

சைவ சமயத்தில் முழுமுதற்கடவுளான சிவபெருமானின் வாகனமாகவும். காவலராகவும் திகழ்பவர் நந்திதேவர் ஆவார். நந்தி என்ற சொல்லுக்கு "ஆனந்தம் தருபவர்" என்று பொருள். சிவபெருமானின் வழிபாட்டில் நந்தி தேவருக்கு மிக முக்கிய இடமுண்டு. சிவ பெருமானின் திருமுன்னே விளங்கும் நந்தியைப் பொதுவகையாக இரண்டு நிலைகளில் பிரிக்கலாம்.

1. இடப நந்தி. 2.அதிகார நந்தி

1.இடப நந்தி: இறைவனின் வாகனமாக விளங்கும் நந்தி.

இடப நந்தி என்பது அறக்கடவுளாகியதருமமே ஆகும். அறக்கடவுளே சிவபெருமானைத் தாங்கும் "வெள்விடையாகக்" (வெள்ளை எருதாக) காட்சி தருகிறார். இதனை.

"நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

என்ற பிள்ளையாரின் பாடல் மூலம் அறியலாம். இந்த வெள்ளேறு எனப்படும் காளை. என்றும் இளமையோடு விளங்குவது. திருஞானசம்பந்தரின் "தோடுடைய செவியன்..." என்ற பாடலிலும் இந்த விடையேறும் சிறப்புக் குறிக்கப்பட்டுள்ளது.

கடவூர் மயானப் பதிகம் முழுவதும் இந்த விடை (நந்தி) பற்றிய சிறப்புகளே காணப்படுகின்றன.

"பெரியவிடைமேல் வருவார் அவர் எம் பெருமான் அடிகளே"
"செங்கண்வெள்ளேறு ஏறிச் செல்வஞ்செய்யா வருவார்"
"வெள்ளைஎருத்தின் மிசையார்"
"ஒன்றாவெள்ஏறு உயர்த்தது உடையார்அதுவே ஊர்வார்" "தூயவிடைமேல் வருவார்"

என்பன ஞானசம்பந்தர் வாக்கு. அறக்கடவுளே பெருமானுக்கு விடையாக வந்து தாங்குவது ஒருபுறமிருக்க. திருமாலும் சிவபெருமானுக்கு இடபமாக (வாகனமாக) வந்து தாங்கினார் என்ற குறிப்பை பின்வரும் திருவாசகப் பாடலால் அறியலாம்.

"கடகரியும் பரிமாவும் தேரும் உகந் தேறாதே
இடபம் உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

2.அதிகார நந்தி: கயிலாயத்தின் வாயிற்காவலராகவும். சிவபெருமானின் அருளாணையைச் செலுத்துபவராகவும். குருநாதராகவும் விளங்குபவர்.

சைவசமயத்தில் குரு மரபுகள் தோன்றுவதற்குக் கயிலாய பரம்பரையே மூலமாகும். இறைவனிடமிருந்தும். அம்பாளிடமிருந்தும். கந்தபெருமானிடமிருந்தும் ஞானம் உபதேசிக்கப்படுவது போல. அதிகார நந்தியாகிய திருநந்தி தேவரிடமிருந்தும் ஞானமரபு தோன்றியது. இந்தத் திருநந்தி தேவரே "அதிகார நந்தி" என்று அழைக்கப்படுகிறார்.

இவரிடமிருந்து தொடங்குவதே திருக்கயிலாய பரம்பரை நந்திமரபு சைவ ஆதீனங்கள் ஆகும். அதிகார நந்தியின் சிறப்பைப் போற்றும் விதமாக அமைந்துள்ள பாடல்:

"அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மைபூண்டு
நங்குரு மரபிற்கெல்லா முதற்குரு நாதனாகி
பங்கயத் துளவ நாளும் வேத்திரப்படை பொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம்போற்றி"

இப்பாடல் கயிலையைக் காக்கும் அதிகார நந்தியை முதற் குருநாதராகப் போற்றித் துதிக்கிறது. பிரதோஷ காலத்தில் நந்தி தேவருக்கு நடக்கும் வழிபாடுகள் மிகவும் விசேஷமானவை. சென்னைக்கு அருகில் உள்ள "பாடி" என்று அழைக்கப்படும் "திருவலிதாயம்" திருத்தலப் பாடலில் பிரதோஷ கால நந்தி வழிபாட்டின் ரகசியம் குறிக்கப்பட்டுள்ளது.

"கடலில் நஞ்சமமு துண்டிமையோர்தொழுதேத்த நடமாடி
அடலிலங்கையரையன்வலிசெற்றருள் அம்மா நாமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின் மதுவிம்மும் வலிதாயம்
உடலிலங்கும் உயிர்ருளளவுந் தொழஉள்ளத் துயர்போமே"

என்று தொடங்கும் இப்பதிகத்தில். கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு தேவர்களைக் காத்த பெருமான். பிரதோஷ காலத்தில் அதிகார நந்தியின் இரண்டு கொம்புகளுக்கு நடுவே நடனமாடுகிறார் என்ற உன்னதத் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உடலும் உயிரும் உள்ளவரை நந்தியின் கொம்புகளுக்கிடையே ஆடும் பெருமானைத் தொழுதால் உள்ளத்தின் துயரங்கள் யாவும் நீங்கும் என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. இத்தகைய விரிவான குறிப்பு திருவலிதாயம் பதிகத்தில் மட்டுமே தனிச்சிறப்பாகக் காணப்படுகிறது. பெருமானுக்கு வாகனமாக திருநந்திதேவர் விளங்குவதை அப்பர் சுவாமிகளின் பின்வரும் திருத்தாண்டகப் பாடலால் அறியலாம்.

"குராமலரோடு அராமதியம் சடைமேல் வைத்தார்
குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்"

திருமுறைகளில் சிவபெருமானுக்கே "நந்தி" என்ற திருநாமம் உள்ளதாகக் கூறப்படு கிறது. "நந்தி நாமம் நமச்சிவாய" என்று தொடங்கும் ஞானசம்பந்தரின் திருவாக்கின்படி. "நந்தி" என்ற நாமம் சிவபெருமானின் திருநாமமாகவே போற்றப்படுகிறது. சிவ பெருமானே நந்தியாகவும் விளங்குகிறான் என்பதே இதன் உட்பொருளாகும்.

காசியில் விஸ்வநாதருக்குத் துரோகம் செய்ய எண்ணிய வியாசரைத் தண்டித்தவரும் திருநந்தி தேவரே. அத்தகைய தொன்மச் சிறப்புகள் வாய்ந்த திருநந்தி தேவருக்கு கொக்குவில் கிழக்கு யாழ்விஷன் இந்துமன்றத்தின் ஸ்ரீ விசாலாட்சி உடனாகிய ஸ்ரீகாசிவிஸ்வநாதர் ஆலயத்தில் "பெரியவிடைமேல் வருவார்" என்ற ஞானசம்பந்தர் வாக்கிற்கிணங்க பெரிய நந்தி தேவருக்கு மகா கும்பாபிஷேகம் மற்றும் திருப்பணிகளை பெரும்பொருட் செலவில் திரு. கந்தையா சுசீந்திரன். திருமதி அருணா சுசீந்திரன் குடும்பத்தினர் நிறைவேற்றியுள்ளனர். அவர்களுக்கு ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும். தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ குருமகா சன்னிதானத்தின் குருவருளும் பெற்றுய்ய பிரார்த்திக்கின்றோம். திருச்சிற்றம்பலம்



## சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளின் ஆசிச் செய்தி

ஓம் நமசிவாய!

கொக்குவில் கிழக்கு யாழ்விஷன் இந்துமன்றத்தின் அருள்மிகு விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதர் திருக் கோயில் பெரிய நந்தி பெருமானுக்கான மஹா கும்பாபிஷேகம் வருகின்ற 25.06.2026 அன்று மிக பிரம்மாண்டமாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. சிவாலயங்களில் நந்தி பிரதிஷ்டை மிக முக்கியமான ஒன்று. அந்த வகையிலே அருள்மிகு விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதர் திருக்கோயிலில் மிகப்பெரிய அளவிலே கருங்கல் நந்தி அமையத் திருவருள் கூடியுள்ளது. யாழ்விஷன் இந்துமன்றத்தினரின் இப்பெரும்பணி கொக்குவில் மண்ணிலே அறமும் தருமமும் நிலை பெறுவதற்கான முன்னேற்பாடாகும். இப்பணிகளை முன்னெடுக்கின்ற திரு. திருமதி சுசீந்திரன் அருணா தம்பதியினர். யாழ்விஷன் இந்துமன்றத்தினூடாக இந்த ஆலயத்தை அமைத்து, ஆலய சைவப் பணிகளையும், கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை ஊடாக மாணவர்களுக்கான அறநெறிக் கல்விப் பணிகளையும் மற்றும் பல பணிகளையும் முன்னெடுப்பது பாராட்டுதலுக்குரிய விடயம். அந்த வகையில் எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளுடைய திருவருளும் மகான்கள், ஞானிகளினுடைய குருவருளும் இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்விற்கும் இதனை முன்னின்று நடாத்திக் கொண்டிருக்கின்ற திரு. திருமதி சுசீந்திரன் அருணா தம்பதியினர் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படுகின்ற அடியவர்களுக்கும் கிடைக்க பிரார்த்தித்து மகிழ்கின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## சைவசித்தாந்த பண்டிதர் மதுரகவி எம்.பி.அருளானந்தன் அவர்களின் வாழ்த்துரை

**பெரிய நந்தி மகா கும்பாபிஷேகம் காணவாரீர்**

நந்தி தேவர் ஆன்மீக ரீதியாகப் பக்தி. பொறுமை, விசுவாசம் மற்றும் தர்மத்தின் உன்னத அடையாளமாக வழிபடப்படுகிறார்.

கொக்குவில் மண்ணில் இத்தகைய பிரம்மாண்டமான திருப்பணியைச் செவ்வனே நிறைவேற்றி. கும்பாபிஷேகத்தைக் காணவிருக்கும் அடியார் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்து கின்றோம்.

எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதரின் திருவருள் துணை நின்று அனைத்து மக்களுக்கும் எந்நாளும் இன்பம் பயக்க வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 | திகதி 23.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4469 | சீட்டிழுப்பு இலக்கம் 1536 | சீட்டிழுப்பு இலக்கம் 0495 | சீட்டிழுப்பு இலக்கம் 2575 | சீட்டிழுப்பு இலக்கம் 6227 | சீட்டிழுப்பு இலக்கம் 2257 | சீட்டிழுப்பு இலக்கம் 0343 |
| ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| | | | சுப்பர் இலக்கம் 14 | | | |
| வெற்றி இலக்கங்கள் 13 32 59 80 | வெற்றி இலக்கங்கள் 17 20 26 56 | வெற்றி இலக்கங்கள் 4 4 5 2 | வெற்றி இலக்கங்கள் 11 35 45 49 | வெற்றி இலக்கங்கள் 2 8 6 5 7 2 | வெற்றி இலக்கங்கள் 17 27 33 43 | வெற்றி இலக்கங்கள் 22 62 66 |
| விசேட எழுத்து L | | | | | விசேட எழுத்து I | |

# சர்வதேசச் சட்டங்களை மதித்து இலங்கை நடுநிலை வகிக்கும்!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 24**

**சர்வதேச அரங்கில் இலங்கை எப்போதும் நடுநிலையாகவும், சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாகவுமே செயற்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் எஸ். போல் கபூர் வெளிவிவகார அமைச்சில் அமைச்சரைச் சந்தித்தபோதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள், முதலீடுகள் மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பொருளாதார மற்றும் பாதுகாப்புத் தேவைகளின் போது அமெரிக்கா வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து தமது வணிக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.

அவ்வாறு வரும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும், அனுமதிகளையும் வழங்க தற்போதைய அரசாங்கம் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் போல் கபூரிடம் உறுதியளித்தார்.

எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள அமெரிக்காவின் 250ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அமெரிக்க அரசாங்கத்துக்கும் அந்நாட்டு மக்களுக்கும் அமைச்சர் விஜித ஹேரத் தனது முன்கூட்டிய வாழ்த்துகளையும் தெரிவித்தார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0935 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 6 2 5 6 1 1 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 3201 | ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 05 30 38 52 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 07 28 37 45 | வெற்றி வாரம் 5362 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| வெற்றி வாரம் 1031 | வெற்றி இலக்கம் 05 37 48 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் 01 14 22 56 | சீட்டிழுப்பு வாரம் 4913 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து M | சுப்பர் இலக்கம் 32 | வெற்றி இலக்கம் 32 37 45 70 | வெற்றி வாரம் 2377 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 25 48 52 59 | வெற்றி வாரம் 3027 |

# மே மாதப் பணவீக்கம் 5.4 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 24

நாட்டின் மே மாத பணவீக்க வீதம் 5.4 வீதமாக அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2026 ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பணவீக்க வீதம் 4.7 வீதமாகப் பதிவாகியிருந்தது. இதேவேளை, 2026 ஏப்ரல் மாதத்தில் 1.1 வீதமாகப் பதிவாகியிருந்த உணவுப் பொருள்களுக்கான புள்ளிப் பணவீக்க வீதம், மே மாதத்தில் 1.5 வீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன், ஏப்ரல் மாதத்தில் 7.8 வீதமாகக் காணப்பட்ட உணவு அல்லாத பொருள்களுக்கான புள்ளிப் பணவீக்க வீதமும் அதிகரித்துள்ளதுடன், அதற்கமைய அது 8.6 வீதம் எனும் அளவை எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இலஞ்சம் கோரிய பொலிஸ் கைது!

கொழும்பு, ஜூன் 24

களுத்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர், இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வாகனம் தொடர்பாக விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையொன்றை மேற்கொண்டு வந்துள்ளது. அந்த விசாரணைக்கு அமைவாக, நீதிமன்றத்தில் குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யாமல் இருப்பதற்காக, குறித்த பொலிஸ் பரிசோதகர் 10 இலட்சம் ரூபா பணத்தைக் கோரியுள்ளதாக தெரியவந்துள்ளது. (ச-இ)

# ஆனந்த விஜேபால மீதான மனு விசாரணைக்கு எடுக்க அனுமதி

கொழும்பு, ஜூன் 24



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவர் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நிர்வாகச் செயலாளர் ரேணுக பெரேராவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியாகப் பணியாற்றி வருகிறார். எனவே அரசியலமைப்பின் பிரகாரம் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்குத் தகைமையற்றவர் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி இந்த மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மேன்முறையீட்டு மனுவைப் பரிசீலித்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஞானசார தேரருக்கு 9 மாதங்கள் சிறை!

## உறுதிப்படுத்தியது உயர்நீதிமன்று



கொழும்பு, ஜூன் 24

இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் விதித்த 9 மாத சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

குறித்த சிறைத்தண்டனையிலிருந்து தன்னை விடுவித்து விடுதலை செய்யுமாறு கோரி ஞானசார தேரரினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி [illegible] இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper

# உதயன்


புதன்பொய்கை

சுடர் : 41
கதிர் : 210

புதன்கிழமை
24 ஜூன் 2026

ஆனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## காக்கைதீவுக் குப்பைக்கிடங்கில் நேற்று மீண்டும் தீ !

பல மணிநேரம் போக்குவரத்து முடக்கம்
வீதிக்கு இறங்கி பொதுமக்கள் போராட்டம்
குழந்தைகள், முதியவர்கள் இடப்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் காக்கைதீவில் உள்ள யாழ்.மாநகரசபையின் குப்பைக் கிடங்கில் நேற்று மீண்டும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. பலமணி நேரமாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட கடும்

»12

செம்மணிப் புதைகுழியிலிருந்து

## நேற்று ஒரேநாளில் மட்டும் 19 என்புத்தொகுதிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று ஒரேநாளில் மட்டும் 19 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன.

»12



வடமராட்சி - வலிக்கண்டிப் பகுதி

## சம்பு புற்தரையில் மீண்டும் பற்றிய தீ

போக்குவரத்துக்கு இடையூறு

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடமராட்சி கிழக்கு வலிக்கண்டி பகுதியிலுள்ள சம்பு புற்தரையில் நேற்று மீண்டும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தீப்பரவல் காரணமாக பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணி நோக்கிச் செல்பவர்

»12

## சட்டத்தின் ஆட்சிபற்றிக் கதைக்க எதிரணியினருக்குத் தகுதியில்லை

அமைச்சர் ஹர்ஷண தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
சட்டத்தின் ஆட்சிபற்றிக் கதைப்பதற்கு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தகுதியில்லை என்று நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரி

»12

போர் இடம்பெற்ற பகுதிகளில்

## இராணுவம் கைப்பற்றியது புலிகளின் தங்கத்தையே!

பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 24
போர் இடம்பெற்ற பகுதிகளில் படையினரால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுடையவை. தமிழ் மக்களிடம் இருந்து இராணுவத்தினர் தங்கம் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது.
பிரதிப்பாதுகாப்பு

»12

## மோ.சைக்கிள் மோதி முதியவர் துயரச்சாவு

வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதி முதியவர் ஒரு

»12

## யானை தாக்கி விவசாயி சாவு

முல்லைத்தீவில் சோகம்

விரிவு பக்கம்:- 12



## கரைவலை மீன்பிடிக்கு எந்தத் தடையுமில்லை

உழவியந்திரம் பயன்படுத்தவே தடை
கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 24
பாரம்பரிய கரைவலை மீன்பிடி முறைக்குத் தடை விதிக்கப்படவில்லை. மாறாக, உழவியந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கவே தடை விதிக்கப்பட்டுள்ளது - இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கரைவலை என்பது ஒரு பாரம்பரிய மீன்

»12

கிளிநொச்சியில் கோரம்

## மோட்டார்சைக்கிள் விபத்தில் முன்னாள் அதிபர் உயிரிழப்பு



கிளிநொச்சி, ஜூன் 24
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கோரவிபத்தில் ஓய்வுநிலை அதிபரும், இலக்கியவாதியுமான பெருமாள் கணேசன் (வயது-62) உயிரிழந்தார்.
தனது அன்றாட நடைப்பயிற்சியை முடித்துவிட்டு வீடுதிரும்பிக்

»12

முச்சந்தி முரளி

"வெயில் தான் நெருப்பா எரியுதெண்டால் இப்ப குப்பைமேடு, புல்வெளியெல்லாமெல்லோ எரியுது"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு மாகாணத் திணைக்களங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 68 புதிய ஆளணி

வடக்கு மாகாணத்தில் டித்வா பேரிடரால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்கும் புனரமைப்புத் திட்டங்களுக்காக, ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில், 68 புதிய ஆளணிகளை நியமிக்க நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் சிவில் பொறியியலாளர் 2, தொழில்நுட்ப உத்தியோகத்தர் 1, வரைவாளர் 1, வேலை மேற்பார்வையாளர் 14, மண் பரிசோதகர் 1 உள்ளிட்ட 19 ஆளணிகளுக்கும், உள்ளூராட்சித் திணைக்களத் தில் சிவில் பொறியியலாளர் 6, தொழில்நுட்ப உத்தியோகத்தர் 5, வரைவாளர் 1, வேலை மேற்பார்வையாளர் 6 உள்ளிட்ட 18 ஆளணிகளுக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சிவில் பொறியியலாளர் 2, தொழில்நுட்ப உத்தியோகத்தர் 4, வரைவாளர் 1, வேலை மேற்பார்வையாளர் 5, மண் பரிசோதகர் 1 உள்ளிட்டம் 13 ஆளணிகளுக்கும், கல்வித் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 4, வரைவாளர் 1, வேலை மேற்பார்வையாளர் 2 உள்ளிட்ட 7 ஆளணிகளுக்கும், சுகாதாரத் திணைக்களத்தில் சிவில் பொறியியலாளர் 1, தொழில்நுட்ப உத்தியோகத்தர் 3, வரைவாளர் 1, வேலை மேற்பார்வையாளர் 2 உள்ளிட்ட 7 ஆளணிகளுக்கும், கட்டடங்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2, வேலை மேற்பார்வையாளர் 1, மண் பரிசோதகர் 1 உள்ளிட்ட 4 ஆளணிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆளணிகளுக்கான ஆள்சேர்ப்பானது அந்தந்தப் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்புக்களின் தகைமைகளுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படும். அத்துடன் இவர்களுக்கான மாதாந்த ஒப்பந்தக் கொடுப்பனவானது உரிய சம்பளத் திட்டத்தின் ஆரம்பப் படியுடன், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவையும் இணைத்துக் கணக்கிடப்படும். மேலும் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் இந்தப் பதவிகளுக்கு இணைக்கப்படுவார்களாயின், அவர்களின் கொடுப்பனவுகள் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களின் மீள் நியமனம் தொடர்பான அரச நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமையத் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (க-66)






## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02.10.1946 — மறைவு 21.06.2026

**நாகலிங்கம் அப்புலிங்கம்**
**(ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்)**

யுத்த காலத்தில் ஏற்பட்ட பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இது எமது மண் நாம் அனைவரும் இங்கு தொழில் புரிவோம் என ஆணையிட்டு பல நூற்றுக்கணக்கான தொழிலாளிகளை உருவாக்க வேண்டும் என்ற நல் எண்ணத்தோடு பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகளை உருவாக்கிய தொழிலதிபர். அவரது ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
ஜெகன் களஞ்சியம்
477, K.K.S Road, Jaffna

(CS/61734) J-1

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 19.12.1939 மறைவு: 25.05.2026

கடந்த 25.05.2026 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தாயார்

**குணநாயகம் அமராவதி**


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.06.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் 26.06.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 02 . 1964



மறைவு 22 . 06 . 2026

**திரு.பெருமாள் கணேசன்**
**(ஓய்வுபெற்ற அதிபர்- சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்-கிளிநொச்சி)**

228, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட பெருமாள் கணேசன் 22.06.2026 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமாள் - பார்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் வனஜலோயினி தம்பதியரின் மருமகனும், சறீனா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், மகரந்தன் (B.Sc), அரிவர்த்தனா (B.Sc), கீதசஞ்சாரன் (மொறட்டுவப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கவி (அவுஸ்திரேலியா) அவர்கிளின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற லோகநாதன், செல்வலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உச்சமாலிகிதன் காலஞ்சென்ற றஜீனா, சகீனா, நளினா, ரவீனா, கஜமுகலிகிதன், வேழமாலிகிதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2026) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
076 226 6146
076 645 5544

(CS 32044) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடமாக மாறட்டும் தீர்ப்பு!

இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச்சீர்குலைக்கும் வகையிலான வெறுப்புப் பேச்சுகளும், அதனூடாகத் தூண்டப்படும் வன்முறைகளும் புதியவையல்ல. இத்தகையதொரு பின்னணியில், இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இன நல்லிணக்கத்தைக் குலைக்க முயன்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்டிருந்த சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உறுதிசெய்திருக்கின்றது.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றை உற்று நோக்கினால், 'இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைத்தல்' அல்லது 'வெறுப்புணர்வைத் தூண்டுதல்' போன்ற குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் சிறுபான்மையினரை நோக்கியே பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது. சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் தென்னிலங்கை அரசியல்வாதிகளினாலும், சில தேரர்களினாலும் மிகப்பரவலாகக் கக்கப்படும் துவேசப் பேச்சுகளும் அச்சுறுத்தல்களும் சட்டத்தின் முன்னால் பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்படுவதே இல்லை என்ற ஆதங்கம் நீண்டகாலமாக நிலவிவருகின்றது. மறுபுறத்தில், தமிழ் மக்கள் தரப்பில் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் ஒரு பாடல் பாடினால் கூட, அல்லது சமூக ஊடகங்களில் கருத்துப் பகிர்ந்தால் கூட, அது உடனடியாக 'இனங்களிடையே நல்லிணக்கத்தைக் குலைக்கும் முயற்சி' என முத்திரை குத்தப்பட்டு, கைது நடவடிக்கைகள் பாய்கின்றமை வாடிக்கையாகிவிட்டது. இந்த இரட்டை நிலைப்போக்கு, நாட்டின் சட்டக் கட்டமைப்பின் மீதான சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைத் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கி வந்தது.

இவ்வாறானதொரு பாரபட்சமான சூழலில், ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ள இந்தத் தண்டனை, நாட்டின் நீதிக்கட்டமைப்பின் மீது மக்கள் ஓரளவாவது நம்பிக்கை வைப்பதற்கான ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கின்றது. சட்டம் என்பது தகுதி, தராதரம், மதம் அல்லது பெரும்பான்மை-சிறுபான்மை என்ற பேதங்களுக்கு அப்பாற்பட்டது; அது அனைவருக்கும் சமமாகவே பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டகால அவாவை இந்தத் தீர்ப்பு ஓரளவுக்கு அர்த்தப்படுத்தியிருக்கின்றது. அரசியல்வாதிகள் என்ற போர்வையிலும், காவி உடைகளுக்குள்ளும் மறைந்துகொண்டு, இனங்களுக்கிடையிலானநல்லிணக்கத்தைச் சீர்குலைத்துத் தங்கள் சுயநல அரசியல் இலாபங்களுக்காகக் குளிர்காய்வோருக்கு இந்தத் தீர்ப்பு ஒரு பாடமாக அமையவேண்டும்.

இலங்கை இன்று பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதற்குக் கடந்த காலங்களில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனமுரண்பாடுகளும், அதன்மூலம் அரசியல் குளிர்காய்ந்தவர்களுமே முழுமுதற் காரணமாவர். இனவாதத்தைக் கையில் எடுத்து நாட்டைச் சீரழித்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பமுடியாது என்ற செய்தி சமுதாயத்துக்குக் கடத்தப்படவேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், அரசியல் அழுத்தங்களுக்கும் மத அடையாளங்களுக்கும் அப்பாற்பட்டு, இவ்வாறானவர்கள் மீது தயவுதாட்சண்யமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய தங்களின் கடமையை உணர்ந்து செயற்படவேண்டும். அப்போதுதான் நாட்டில் உண்மையான நல்லிணக்கமும், நீடித்த அமைதியும் சாத்தியமாகும்.




## பொய்யாமொழி

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று**

**பொருள்:** வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்துவிடுதல் பொறுத்தலைவிட நல்லது.




# சுற்றுலாவிகள் வரவு அதிகரிப்பு டொலர் வருமானத்தில் வீழ்ச்சி!



கொழும்பு, ஜூன் 24

**இலங்கைக்கு கடந்த மே மாதத்தில் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு 145,745 வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர். இது 2025ஆம் ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 9.65 வீத அதிகரிப்பாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

சுற்றுலாப் பயணிகளின் வருகை உச்சத்தை எட்டியுள்ள போதிலும், அமெரிக்க டொலருக்கு நிகரான வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய வங்கியின் தரவுகளின்படி, கடந்த ஆண்டு மே மாதத்தில் 164.1 மில்லியன் டொலராக இருந்த வருமானம், இம்முறை 155.7 மில்லியன் டொலராக (5.11 வீதம்) வீழ்ச்சி கண்டுள்ளது. எனினும், இலங்கை ரூபாவுக்கு எதிராக அமெரிக்க டொலரின் மதிப்பு வலுவடைந்தமையால், ரூபா அடிப்படையிலான வருமானம் 49.1 பில்லியனிலிருந்து 50.6 பில்லியன் ரூபாவாக (3.05 வீதம்) அதிகரித்துள்ளது. இதேவேளை, 2026ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கான ஒட்டுமொத்த சுற்றுலா வருமானம் 1.36 பில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11.9 வீத வீழ்ச்சியாகும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## விசேட டெங்கு ஒழிப்பு வலயங்கள் அடையாளம்

கொழும்பு, ஜூன் 24

நாடு முழுவதும் நிலவும் டெங்கு அபாயத்தைக் கருத்திற்கொண்டு, ஜூன் மாதத்துக்காக சுகாதாரப் பிரிவினரால் விசேட டெங்கு ஒழிப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 14 மாவட்டங்களைச் சேர்ந்த 331 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட 538 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதி அபாய வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இந்த விசேட கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், இனங்காணப்பட்டுள்ள அதிஅபாயப் பிரிவுகளில் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில்விசேடஆய்வுகள், புகையூட்டல் நடவடிக்கைகள் மற்றும் வளாகப் பரிசோதனைகளை தீவிரப்படுத்தவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளனர். (எ-இ)



## தங்க விலையில் சிறிய வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் தங்கத்தின் விலை நேற்று வீழ்ச்சியடைந்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 386,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று அதன் விலை 2,000 ரூபாவால் குறைந்து 384,000 ரூபாவாகக் காணப்பட்டது. 22 கரட் தங்கம் ஒரு பவுண் 353,300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)

## டொலர் பெறுமதியில் சிறிய அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 24

இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை சற்று அதிகரிப்பைக் காட்டியுள்ளது. நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 339.49 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் இதன் விற்பனை விலை 339.06 ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)

# பாதுகாவலர்களைக் கட்டிவைத்து வங்கியிலிருந்து பணம் கொள்ளை

கொழும்பு, ஜூன் 24

கிராமிய வங்கி ஒன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்து, அதிலிருந்த பெருமளவிலான தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மொரகஹஹேன, கோரலைம பகுதியில் நடந்துள்ளது. அதிகாலை ஒரு மணியளவில் வங்கி வளாகத்துக்குள்நுழைந்துள்ள மூவர் கொண்ட குழு, அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கட்டிவைத்துவிட்டு அவர்கள் அங்கிருந்த பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்து, அதற்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தங்கநகைகளைத் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 09 . 1999

மறைவு 21 . 06 . 2026

## நாகேஸ்வரன் நவீன்ராஜ் (நவீன்)

யாழ் சில்லாலை, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரன் நவீன்ராஜ் (நவீன்) அவர்கள் (21.06.2026) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.


அன்னார் நாகேஸ்வரன் - வசந்தகுமாரி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், லாவன்ஜன், பிரவீன்காந் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற இரத்தினம் மகேஸ்வரியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பிரான்பற்று விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/61568) J-1


# 'ரின்' இலக்கத்துக்காக யாழில் நீண்ட வரிசை



யாழ்ப்பாணம், ஜூன் 24

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, பொதுமக்கள் கடந்த சில நாள்களாக, யாழ்ப்பாண அலுவலகத்தில் நீண்ட வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்துள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் குறித்த இலக்கத்தைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு தண்டம் விதிக்கப்படும் என்ற தகவல் பரவியதாலேயே மக்கள் இவ்வாறு முண்டியடிக்கின்றனர். யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருகைதரும் மக்கள் அதிகாலை முதலே திணைக்களத்துக்கு முன்பாக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். (க-66)


# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 04 . 1931

மறைவு 23 . 06 . 2026

## திரு.சின்னையா மகேந்திரன்
### (இளைப்பாறிய கட்டட பொறியியலாளர்)

சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேந்திரன் நேற்று (23.06.2026) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தங்கமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பவளம், ராசமணி, மார்க்கண்டு, சின்னம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்களான நவமணி, இராசமணி, மகேஸ்வரி, நேசமணி, ஞானமணி மற்றும் புஸ்பவதி, தவமணி, ஜெயமணி ஆகியோரின் மைத்துனரும், தவமணி, புஸ்பலீலா, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற லோகேஸ்வரன், இராகினி, மாலினி, வாமதேவன், கௌசலா, இரவீந்திரநாதன், ஜெயந்தி, இராசவேல், காலஞ்சென்ற இராசமலர், இராஜபதி, இராசநாயகம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2026) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதான வீதி,
(சிங்கர் கம்பனிக்கு முன்பாக)
077 303 4114

தகவல்:
குடும்பத்தினர்



# INVITATION FOR BID 2026/04
# VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council, Dithwa & PSDG.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building & highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-06-24 To 2026-07-07 during 09:00 A.M and 15:00 P.M.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, E.mail: vswps@yahoo.Com) from 09:00 A.M and 15:00 P.M. During the period stated in table below upon payment of non- refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026.06.24 To 2026.07.07 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026.07.01 |
| Closing and Opening of Bids | At 10.00 A.M on 2026.07.08 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| PSDG | | | | | | | | |
| NP/14/41(16)/W/PSDG/2026/01 | Construction of meat stall and other Improvement works at Makiyapitty Market | 2.96 | 60 | C9, C8 and C7 (Building) | 3,500.00 | 30,000.00 | 23.09.2026 | 26.08.2026 |
| DITHWA | | | | | | | | |
| NP/14/41(16)/W/Dithwa/2026/02 | Renovation of Marumalrchchi Road, Kompanipulam | 3.81 | 60 | C9, C8 and C7 (Highway) | 3,500.00 | 38,500.00 | 23.09.2026 | 26.08.2026 |
| COUNCIL | | | | | | | | |
| NP/14/41(16)/W/CF/2026/07 | Construction of Sammady jolai Veethi Stage I | 2.25 | 60 | C9, C8 and C7 (Highway) | 3,500.00 | 22,500.00 | 23.09.2026 | 26.08.2026 |
| NP/14/41(16)/W/CF/2026/08 | Renovation of Ammpaal Road Stage II | 3.25 | 60 | C9, C8 and C7 (Highway) | 3,500.00 | 32,500.00 | 23.09.2026 | 26.08.2026 |
| NP/14/41(16)/W/CF/2026/09 | Renovation of Uyarappulam Main Road Stage I | 3.30 | 60 | C9, C8 and C7 (Highway) | 3,500.00 | 33,000.00 | 23.09.2026 | 26.08.2026 |
| NP/14/41(16)/W/CF/2026/10 | Reconstruction of Thiresamma Lane 1st Lane | 1.92 | 60 | C9, C8 and C7 (Highway) | 3,500.00 | 20,000.00 | 23.09.2026 | 26.08.2026 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha, Manipay.
24.06.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

24.06.2026
புதன்கிழமை


அகங்காரம்
மிக்கவனுக்கு
குருவின் போதனைகள்
கூட பயனற்றவை.

-ஷீரடி சாயிபாபா-

# இலங்கையும் எல்-நினோவும்:



■ மு.தமிழ்ச்செல்வன்

## விவாதப் புயலில் தீவுத் தேசமும் தீவிரமடையும் வெப்ப எச்சரிக்கையும்

அண்மைய நாள்களாக இலங்கையின் அரசியல் மற்றும் பொது விவாதத் தளங்களில் எல் -நினோ (El-Nino) பற்றிய உரையாடல்கள் மிகத் தீவிரமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன. நாட்டின் நாடாளுமன்றத்தில், அரச திணைக்களங்களின் கூட்டங்கள், ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங் களின் பதிவுகள் என அனைத்துத் தளங்களிலும், இந்த உலகளாவிய காலநிலை மாற்றத்தினால் இலங்கைக்கு ஏற்படவுள்ள பாதிப்புகள் குறித்தே பரவலாகப் பேசப்படுகிறது.

இந்த அச்சத்துக்கும் விவாதங்களுக்கும் மத்தியில், கடந்த வாரம் இலங்கையின் சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையின்படி, எல்-நினோ காலநிலை மாற்றத்தின் தீவிர தாக்கம் இலங்கையில் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையை நாற்புறமும் சூழ்ந்துள்ள இந்தியப் பெருங்கடல் மற்றும் நாட்டின் மத்திய மலைநாட்டுப் பகுதி ஆகியன இயற்கையாகவே வளிமண்டலத்திற்குத் தேவையான ஈரப்பதத்தை வழங்குவதால், மிகத் தீவிரமான வறட்சியோ அல்லது பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கடுமையான பாதிப்புகளோ ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும், நாட்டின் வானிலை நிலைவரத்தைக் கண்காணிக்கும் முதன்மை நிறுவனமான இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் மாறுபட்ட மற்றுமொரு எச்சரிக்கையை விடுத்துள்ளது. அவர்களின் சமீபத்திய அறிக்கையின்படி, எல்-நினோவின் தாக்கம் இலங்கையில் நிச்சயமாகக் காணப்படும் என்றும், குறிப்பாக வரவிருக்கும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் வழக்கத்துக்கு மாறான கடுமையான வெப்பம் நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சுற்றாடல் அமைச்சின் கணிப்பு ஓரளவிற்கு நிம்மதியளித்தாலும், வளிமண்டலவியல் திணைக்களத்தின் இந்த எச்சரிக்கை நாம் அலட்சியமாக இருக்கமுடியாது என்பதை உணர்த்துகிறது. எனவே, தீவிரப் பேரழிவுகள் தவிர்க்கப்பட்டாலும், வரவிருக்கும் மாதங்களில் நிலவப்போகும் கடுமையான வெப்ப அலைகள் மற்றும் தற்காலிக காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள அரசும் பொதுமக்களும் விழிப்புணர்வுடன் தங்களைத் தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு மத்திய பகுதிகளில் கடல் மேற்பரப்பு நீர் வழக்கத்திற்கு மாறாக வெப்பமடைவதை மையமாகக் கொண்டு தோன்றும் 'எல்-நினோ' எனும் காலநிலை நிகழ்வு, இன்று வெறுமனே ஒரு இயற்கை விசித்திரம் மட்டுமல்ல; அது ஒட்டுமொத்த மனிதகுலத்தின் வாழ்வாதாரத்தையே அசைத்துப் பார்க்கும் உலகளாவிய அச்சுறுத்தலாகும். இயற்கையாகவே குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் இம்மாற்றம், உலகளாவிய காற்றுச் சுழற்சியையும் மழைப்பொழிவு வடிவங்களையும் முற்றிலுமாக தலைகீழாக மாற்றியமைக்கும் பேராற்றல் கொண்டது.

சாதாரண காலங்களில் ஆசியாவை நோக்கி வீசும் பலத்த காற்றுகள் பலவீனமடைவதால், கடலின் வெப்ப வலயங்கள் இடம்மாறி உலகெங்கும் தீவிர வானிலை அதிர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. இதன் விளைவாக, தென் அமெரிக்காவின் மேற்கு கடலோரப் பகுதிகள் மற்றும் அமெரிக்காவின் தெற்குப் பகுதிகளில் வழக்கத்திற்கு மாறான கடுமையான மழையும், வெள்ளப்பெருக்கும் ஏற்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் மிகக் கொடூரமான வறட்சியையும், கட்டுப்படுத்த முடியாத காட்டுத்தீயையும் இது உருவாக்குகிறது. மேலும், எல்-நினோ நிலவும் ஆண்டுகளில் ஒட்டுமொத்த பூமியின் சராசரி வெப்பநிலையானது கணிசமாக உயர்ந்து, உலகளாவிய வெப்ப அலைகளுக்கு வழிவகுக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் மத்தியில் அமைந்துள்ள இலங்கைத் தீவிலும் இது ஒரு மாறுபட்ட இருமுனைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆண்டின் முற்பகுதியான தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழைப்பொழிவை முற்றிலுமாக குறைத்து மேல், சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் கடுமையான வறட்சியைத் தோற்றுவிக்கும் எல்-நினோ, ஆண்டின் பிற்பகுதியான வடகீழ் பருவமழைக்காலத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு-கிழக்கு மாகாணங் களில் வழக்கத்துக்கு மாறான மிகத் தீவிரமான மழைப்பொழிவை ஏற்படுத்தி, திடீர் வெள்ளப்பெருக்குகளையும் உண்டாக்கக்கூடும்.

இந்தக் காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் சார்ந்து ஏற்படும் பாதிப்புகள் மிகவும் ஆழமானவை. ஒருபுறம் வறட்சியினால் நதிகளும் நீர்த்தேக்கங்களும் வற்றிப்போக, மறுபுறம் கனமழையினால் நிலச்சரிவுகளும் மண் அரிப்புகளும் ஏற்பட்டு பல்லுயிர்த்தன்மை பெருமளவில் பாதிக்கப்படுகிறது. கடலின் வெப்பநிலை உயர்வதால் பவளப்பாறைகள் வெளிறி அழிவதுடன், கடல்சார் உணவுச் சங்கிலியும் சீர்குலைகின்றது. இத்தகைய சூழலியல் சிதைவு, எதிர்காலத்தில் மக்களின் வாழ்வியல் கலாசாரம் மற்றும் அன்றாட நடைமுறைகளில் பாரிய சமூகப் பாதிப்புகளைத் தோற்றுவிக்கும். குறிப்பாக, விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட கிராமிய சமூகங்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது, அவர்கள் வாழ்விடங்களை விட்டு இடம்பெயர நேரிடும். நீர்ப் பற்றாக்குறையும் உணவுப் பாதுகாப்பின்மையும் மனிதர்களுக்கிடையிலான மோதல்களை உருவாக்குவதுடன், வறண்ட வலயங்களில் நிலத்தடி நீர் மாசுபடுவதால் சிறுநீரக நோய் போன்ற கொடிய சுகாதாரப் பாதிப்புகள் தீவிரமடையும். காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த விவசாயப் பருவகாலங்களை மையமாகக் கொண்ட பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் இந்த ஒழுங்கற்ற காலநிலையால் தடம்மாறி, மக்களின் பாரம்பரிய வாழ்வியல் முறைமையே சிதைவடையும் ஆபத்து எழுந்துள்ளது.



இத்தகைய பாரதூரமான அச்சுறுத்தலை எதிர்கொள்வதில் ஒரு அரசின் பொறுப்பு மிக முதன்மையானதாகும். இலங்கை அரசாங்கம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் நவீன தரவுகளைக் கொண்டு, முன்கூட்டியே வறட்சி மற்றும் வெள்ள அபாயக் கணிப்புகளை மாவட்ட ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் துல்லியமாக வெளியிடவேண்டும். வறட்சிக் காலத்தில் நீர் விநியோகத்தை சீராகப் பேணவும், நீர்மின் பற்றாக்குறையை ஈடுசெய்யவும் சூரியசக்தி, காற்றாலை போன்ற மாற்று புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கு அவர்களின் பாரம்பரிய பெரும்போகம் மற்றும் சிறுபோகப் பயிர்ச்செய்கை காலங்களுக்கு ஏற்றவாறு, வறட்சியைத் தாங்கக்கூடிய அல்லது அதிக நீரைத் தாங்கக்கூடிய மாற்றுப் பயிர் இனங்களை அறிமுகப்படுத்தி, அவற்றுக்கான மானியங்களையும் தொழில்நுட்ப வழிகாட்டல்களையும் வழங்கவேண்டியது அவசியமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அனர்த்தங்கள் நிகழும் போது பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடி நிவாரணங்களையும், தூய்மையான குடிநீர் விநியோகக் கட்டமைப்பையும் தங்குதடையின்றி உறுதிசெய்ய வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு உண்டு.

அரசின் வழிகாட்டல்களுக்கு இணையாக, பொதுமக்களுக்கு இருக்கவேண்டிய விழிப்புணர்வும் இந்தச் சவாலை வெல்வதில் முக்கியமான பங்குவகிக்கிறது. எல்-நினோ காலங்களில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையை உணர்ந்து, பொதுமக்கள் குடிநீரையும் அன்றாடத் தேவைக்கான நீரையும் மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நுகர்வுக் கலாசாரத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். வீடுகளில் மழைநீர் சேகரிப்பு முறைகளைக் கட்டாயமாக்குவதும், விவசாய நிலங்களில் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நவீன நீர் மேலாண்மை நுட்பங்களைக் கையாளுவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். கடுமையான வெப்ப அலையின் போது ஏற்படும் உடல்நலப் பாதிப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள போதிய அளவு நீர் அருந்துதல், தேவையற்ற உச்சிநேர வெயில் நடமாட்டங்களைத் தவிர்த்தல் போன்ற சுய பாதுகாப்பு விழிப்புணர்வை மக்கள் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு, வடகீழ்ப் பருவமழையின் போது ஏற்படும் திடீர் வெள்ள அபாயங்கள் குறித்து விழிப்புடன் இருந்து, வதந்திகளை நம்பாமல் அனர்த்த மேலாண்மைப் பிரிவினரின் அதிகாரபூர்வ அறிவுறுத்தல்களைக் கேட்டு நடப்பதன் மூலம் பெருமளவிலான உயிர் மற்றும் உடைமை இழப்புகளைத் தடுத்துக்கொள்ள முடியும். இயற்கையின் இந்த உலகளாவிய சவாலை அரசும் மக்களும் பரஸ்பர நம்பிக்கையுடனும் ஒருங்கிணைந்த திட்டமிடலுடனும் எதிர்கொள்வதன் மூலமே, நாட்டின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் எதிர்கால சந்ததிக்காகப் பாதுகாக்கமுடியும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமூக விடுதலைக்காக உழைத்த பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை: மகாஜனக் கல்லூரியின் மாபெரும் வரலாறு!



க. வசந்தரூபன்
(பழைய மாணவர், அதிபர், யாழ்/பொன். பரமானந்தர் ம.வி. குரும்பசிட்டி)



ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியும், சமூக சீர்திருத்தவாதியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநருமான பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் 97ஆவது நினைவுநாள் இன்றாகும். ஒவ்வொரு வருடமும் ஜுன் 24ஆம் திகதி மகாஜனக் கல்லூரியில் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழமை. இதே நன்னாளில்தான், 1929ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளை இயற்கை எய்தினார்.

**பிறப்பும் கல்விப் பின்னணியும்**

பாவலர் துரையப்பாபிள்ளை தெல்லிப்பழை கச்சேரி முதலியார் அருளம்பலத்துக்கும் தங்கம்மாவுக்கும் 1872ஆம் ஆண்டு ஒக்ரோபர் 12ஆம் திகதி தவப்புதல்வனாக அவதரித்தார். இயல்பாகவே புலமைத்துவப் பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் உதித்த இவருக்குத் தெல்லிப்பழை பிரதேசத்தின் கல்விச்சூழலும் கைகொடுத்தது. 'கல்லாமை பாதி குலவித்தை' என்பதற்கு இணங்க, கல்வி மரபு மிக்க குடும்பத்தில் பிறந்த இவருக்கு இயல்பாகவே அறிவுத்திறன் மிளிர்ந்ததில் வியப்பில்லை.

அவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1880இல் தெல்லிப்பழை ஆங்கில வித்தியாசாலையில் இணைந்தார். பின்னர் மேற்படிப்புக்காக 1888 இல் வரலாற்றுப் புகழ்பெற்ற வட்டுக்கோட்டை செமினரிக்குச் சென்றார். 1890 இல் கேம்பிரிட்ஜ் உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் சித்தியடைந்து அரசாங்க சேவையில் இணைந்தார்.

**தேடலும் ஆசிரியர் பணியும்**

அரசாங்கப் பணியில் சேர்ந்தபோதிலும், மக்கள் பணியே பெரிதெனக் கருதி 1892 இல் அப்பணியைத் துறந்தார். பின்னர் பாணந்துறை தூய யோவான் (St. John's) கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்றார். இக்காலப்பகுதியில் அவர் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியலை நெருக்கமாக அறிந்துகொண்டார். அதன் பின்னர், 1895 இல் வட இந்தியா நோக்கிப் பயணித்து, பம்பாய் மாநிலத்தின் கோலாப்பூர் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இக்காலகட்டத்தில் இந்தியாவில் தீவிரமாக நடந்த விடுதலை இயக்கப் போராட்டங்கள் இவரைக் கவர்ந்தன.

1898 இல் பம்பாயில் பிளேக் நோய் பரவியதைத் தொடர்ந்து, தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்கி இலங்கை திரும்பியவர், மீண்டும் தெல்லிப்பழை ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இணைந்தார். 1899 இல் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். 1900ஆம் ஆண்டில் அவர் கற்பித்த பாடசாலை அமெரிக்க மிஷனரிகளால் பொறுப்பேற்கப்பட்டு, தெல்லிப்பழைச் சந்திக்கு அருகில் நிறுவப்பட்ட போது, அதன் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

**மகாஜனக் கல்லூரியின் தோற்றம் (1910)**

1910ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஒரே பரபரப்பு நிலவியது. மிஷனரிமார்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த ஆங்கிலக் கல்வியை, எமது சொந்தச் சைவத் தமிழ் சூழலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற தீரா வான்புகழ் நோக்கு பாவலரிடம் இருந்தது. அன்றைய தினமே அவர் அமெரிக்க மிஷன் பாடசாலையுடனான தொடர்பை முறித்து, தனது தலைமை ஆசிரியர் பதவியைத் துறந்தார்.

அன்றே தனது சொந்த இல்லத்தில் 'மகாஜன உயர்நிலைப் பாடசாலை' தொடங்குவதற்குக் கால்கோள் விழா எடுத்தார். பாவலரின் இந்த உன்னத நோக்குக்குத் துணையாக ஆசிரியர்களான நா சங்கரப்பிள்ளை, க.இலங்கைநாயகம் ஆகியோரும் அமெரிக்க மிஷனில் இருந்து விலகி வந்து இவருடன் இணைந்துகொண்டனர். மாணவர்களும் மிஷன் பாடசாலையை விட்டு வெளியேறி, பாவலரின் புதிய பாடசாலையில் சேர்ந்தனர்.
மிஷனரிகளின் பலத்த சவால்களுக்கு மத்தியில், மகாஜனப் பள்ளி மாணவர்கள் பொதுத்தேர்வுகளில் பங்கேற்கப் பாவலர் வழிவகை செய்தார். 1916 இல் இம்மாணவர்கள் பொதுத்தேர்வு எழுத உத்தியோகபூர்வ அனுமதி வழங்கப்பட்டு, மிகச் சிறந்த முடிவுகளையும் பெற்றனர். பாவலரின் மறைவுக்குப் பின்னர், அவரது சகலனும் கவிஞருமான சின்னப்பா 16 ஆண்டுகள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து 'மகாஜனச் சிற்பி' என அழைக்கப்படும் தெ.து.ஜெயரத்தினம் 25 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி, கல்லூரியின் பொற்காலத்தை உருவாக்கினார். ஏறத்தாழ 70 ஆண்டுகள் பாவலரின் குடும்பத்தினரே இப்பாடசாலையைச் சீரிய முறையில் வழிநடத்தியுள்ளனர்.

**சமூகச் சிந்தனைகளும் தொலைநோக்குப் பார்வையும்**

ஆங்கிலேயர் காலத்தில் மேலைநாட்டுக் கல்விக் கொள்கைகளால் சைவத் தமிழ் மாணவர்கள் தங்களின் மத, கலாசாரப் பண்பாடுகளை இழந்து வந்தனர். மகாஜனக் கல்லூரியின் தோற்றத்தின் ஊடாகத் தமிழ் மாணவர்கள் ஒரு சைவச் சூழலில் தரமான ஆங்கில உயர் கல்வியைப் பெறும் பெரும் வாய்ப்பு ஏற்பட்டது. 'நாவலர் பெருமானின் நீதி வழியைத் தொடர்ந்தவர்கள் மிகமிகச் சிலர். அந்தச் சிலரில் ஒருவராகச் சிரேஷ்டராய் விளங்கியவர் துரையப்பாபிள்ளை அவர்கள். இவருக்குச் சைவ உலகம் செய்யவேண்டிய நன்றிக்கடன் மிகப் பெரியது.' - என்று பாவலரின் பணியைச் சிலாகிக்கிறார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (பாவலர் நூற்றாண்டு விழா மலரின் ஆசியுரையிலிருந்து).

பாடசாலைக் கல்விக்கு அப்பாலும் கல்வி முறைமை விரிவடைய வேண்டும் எனச் சிந்தித்த பாவலர், இலங்கைக்குத் தனியானதொரு 'பல்கலைக்கழகம்' தேவை என்ற கருத்தை முதன் முதலில் முன்வைத்த முன்னோடியாவார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை அன்றே வலியுறுத்தியவர். கல்வி, தொழில், பண்பாடு, சுதேசியம், அரசியல் ஆகியவற்றைத் தனது கவிதைகளின் பாடுபொருளாகக் கொண்டிருந்தார். சாதிப்பிரச்சினை, சீதனக் கொடுமை, மது ஒழிப்பு போன்ற சமூக அவலங்களுக்கு எதிராகத் தனது பேனா முனையைத் திருப்பியவர். ஒரு சமூக நிறுவனமாக நின்று செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைத் தன் தனிமனித உழைப்பால் சாதித்துக் காட்டினார்.

சமூக நோக்கோடு, சாதாரண பொதுமக்களின் (மகாஜனங்களின்) மேம்பாட்டிற்காகப் பாவலர் விதைத்த கல்வி விதை, இன்று தெல்லிப்பழை மண்ணில் மாபெரும் விருட்சமாகப் படர்ந்துள்ளது. இன்று இலங்கையிலேயே மிக முக்கியமான அடையாளப் பாடசாலைகளுள் ஒன்றாக மகாஜனக் கல்லூரி திகழ்கிறது.

கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறைகளில் அது தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்துள்ளது. பாவலர் துரையப்பாபிள்ளையின் 97ஆவது நினைவுநாளான இன்று, அவரின் அரும்பெரும் சமூகப் பணிகளை நன்றியோடு நினைவுகூர்வதுடன், கல்லூரியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு மகாஜனர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் என உறுதியேற்போம்!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மீண்டும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மீது அடக்குமுறை!




**பொ. சிந்துயன்**
(இறுதியாண்டு சட்டத்துறை மாணவன்,
Bloomsbury university, london)

'ஜனநாயகம்' என்பது மக்களாட்சியைக் குறிக்கும் சொல்லாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது நாட்டின் பெயரில் மட்டுமே வெறும் சொல்லாகக் காணப்படுகிறது. உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில், மக்களுடைய அடிப்படை உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் மக்கள் தங்களின் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்த முற்படும்போது, அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமும், அரச முப்படைகளின் மூலமும் மிகக் கொடூரமாக அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

### கருத்துச்சுதந்திரத்தின் மீதான அதிகார அடக்குமுறை

தற்போது இலங்கையில் சாமானிய மக்கள் தொடங்கி ஊடகவியலாளர்கள் வரை, தங்களின் அடிப்படை உரிமையான 'கருத்துச் சுதந்திரத்தினை' பயன்படுத்துவதை இலங்கை அரசும், பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் அதிகாரபலத்தைக் கொண்டு ஒடுக்கிவருகின்றனர். இத்தகைய ஒடுக்குமுறைகளால் இலங்கையில் ஆகக்கூடுதலாகப் பாதிக்கப்படும் தரப்பினர் சிறுபான்மை இனத்தவரான தமிழர்கள் ஆவர்.

தமிழர்களுக்கு எதிராக அரசினாலும், அரச அதிகாரிகளாலும், ஆட்சியாளர்களாலும் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளை உலகிற்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் வெளிச்சமிட்டுக் காட்டும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் இன்று மிகக் கடுமையான அச்சுறுத்தல்களைச் சந்தித்து வருகின்றன. இவர்கள் குற்றவியல் விசாரணைப் பிரிவினராலும், பயங்கரவாத தடுப்புப் பிரிவினராலும் மற்றும் 'Counter Terrorism' அமைப்பினராலும் 'விசாரணை, வாக்குமூலம் பெறல்' என்ற பெயரில் அன்றாடம் அலைக்கழிக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் அண்மைக்காலமாக



மிகவும் அதிகரித்துள்ளது.

சிங்களப் பேரினவாத அரசினால் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இவ்வாறான அடக்குமுறைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வந்தாலும், தற்போது தமிழ் அரசியல்வாதிகள் சிலரே இந்த ஒடுக்குமுறைக் கொள்கையைத் தங்களின் சொந்தச் சுயலாப ஆயுதமாகக் கையில் எடுத்துள்ளது தான் வேதனையின் உச்சமாகும்.

### தமிழ் அரசியல்வாதிகளின் போலி முகங்களும் ஊடக ஒடுக்குமுறையும்


தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரான எம். ஏ. சுமந்திரனின் கைப்பொம்மையாகச் செயற்படும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராச மாணிக்கமும் இன்று ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும், மனித உரிமை ஆர்வலர்களினதும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முற்படுகின்றார்.

சாணக்கியன் இராசமாணிக்கம் முன்பு இலங்கை சுதந்திரக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளராக இருந்தவர். தமிழ் இனப்படுகொலையாளரான மகிந்த ராஜபக்ச ஆட்சியின் தீவிர ஆதரவாளராகவும், தமிழர்களைக் கொன்றுகுவித்த வரலாற்றுத் துரோகக் கூட்டாளியான துணை இராணுவக்குழுத் தலைவர் பிள்ளையானின் நெருங்கிய நண்பராகவும் விளங்கியவர். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சாணக்கியன், பின்னர் அக்கட்சியிலிருந்து விலகி, சுமந்திரனின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமிழரசுக்கட்சியோடு தன்னை இணைத்துக்கொண்டு 2020இல் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார்.

### நீதிமன்றங்களின் ஊடாக ஊடகங்களுக்கு விடுக்கப்படும் தடை

தற்போது சுமந்திரனின் ஆசிர்வாதத்தோடு சாணக்கியன் தமிழ் ஊடகங்களையும், தமிழ் ஊடகவியலாளர்களையும் ஒட்டுமொத்தமாகத் தடை செய்யும் சட்டப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

பிரபல தமிழ் ஊடகங்களால் தனக்கு எதிராக வெளியிடப்பட்ட காணொலிகளை இணையத்திலிருந்து நீக்கவேண்டும் என்றும், தமக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட தமிழ் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இலங்கையில் இயங்குவதைத் தடை செய்யவேண்டும்




என்றும் கோரி, 15இற்கும் மேற்பட்ட தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களை எதிராளிகளாகக் குறிப்பிட்டுச் சாணக்கியன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். இந்த வழக்குகளின் பின்புலமாகச் சுமந்திரனே இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும், அதனை சுமந்திரன் தரப்பு நிராகரித்திருந்தது.

### சர்வதேச அமைப்புகளின் கண்டனமும் காலத்தின் தேவையும்

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டங்களையும், கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் பயன்படுத்துவது கருத்துச்சுதந்திரத்தின் மீது மீண்டும் மீண்டும் ஒரு 'அச்சமூட்டும் விளைவை' ஏற்படுத்தியுள்ளது என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ) போன்ற சர்வதேச அமைப்புகள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் குற்றவியல் சட்டங்களின் கீழ் பெரும்பாலும் சட்டவிரோதக் கைதுகள், திட்டமிட்ட நீடித்த விசாரணைகள் மற்றும் பழிவாங்கும் நோக்கிலான வழக்குத் தொடர்தல்களே அரங்கேற்றப்படுகின்றன. இலங்கை அரசானது ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் உயிருக்கும் உடல் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்த இலக்கு வைக்கப்பட்ட சட்டக்கைதுகளையும், மிரட்டல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மக்கள் தங்களின் கருத்துச் சுதந்திரத்தை அச்சமின்றிப் பயன்படுத்தும் நாடே உண்மையான ஜனநாயக நாடாக இருக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நேற்று...

செம்மணி மனிதப்புதைகுழி மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 32 ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, புதைகுழிக்குள் இருந்து 19 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து ஒரே தடவையில் மிகவும் அதிகளவான என்புத்தொகுதிகள் மீட்கப்பட்ட நாளாக நேற்றைய தினம் பதிவாகியுள்ளது.

செம்மணிப்புதைகுழி மீதான அகழ்வுப் பணிகள் நேற்றுடன் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன. அடுத்தகட்ட அகழ்வுப் பணிகள் ஜூலை மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 412 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றில் 409 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா, நிறஞ்சன் ஆகியோர் அகழ்வுப்பணிகளில்முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இராணுவம்...

அமைச்சர் அருண ஜயசேகர இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களிடமிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு தங்க நகையையும் இராணுவம் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது புலிகளின் முகாம்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் (சுமார் 150 கிலோ) கைப்பற்றப்பட்டன.

இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட இந்த நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. நீதிமன்றம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கி ஊடாக இதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. அடுத்த மூன்றுமாத காலப்பகுதிக்குள் அந்தப் பணிகள் அனைத்தும் நிறைவுபெறும் என எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னர் தங்க ஆபரணங்களை அதன் உரிமையாளர்களிடம் மீளக் கையளிப்பதற்குரிய நடவடிக்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும். குறித்த தங்க நகைகளின் உரிமையாளர்கள் தொடர்பான தகவல்கள் இராணுவத்திடம் இல்லை - என்றார். (அ-ம-இ)

## சட்டத்தின்...

வித்தார். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டத்தின் ஆட்சி, நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் உறுதிப்படுத்தும் நோக்கிலேயே நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். மக்களுக்கு நாங்கள் எத்தகைய வாக்குறுதிகளை வழங்கினோமோ அந்தவாக்குறுதிகள் அனைத்தும் எம்மால் நிறைவேற்றப்படும். சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கடந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் கதைப்பதானது கோழிப்பண்ணை மீது நரிகள் அக்கறை காட்டுவதைப் போன்றது. நீதியரசருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவந்தவர்களும், நீதிபதியின் வீட்டின்மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியவர்களும் சட்டத்தின் ஆட்சிதொடர்பில் கதைப்பது வேடிக்கையானது - என்றார். (அ-ம)

## யானை...

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இத்திமடு பகுதியில் யானைதாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் இத்திமடு பகுதியைச் சேர்ந்த சண்முகராசா சர்விதன் (வயது-30) என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## கரைவலை...

பிடி முறையாகும். அத்தகைய மீன்பிடி நடவடிக்கைக்கு நாங்கள் தடைவிதிக்கவில்லை. ஆனால், உழவியந்திரம் உள்ளிட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, கடல்வளத்தை அழிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் மீன்பிடி நடைமுறைகளுக்கே தடைவிதித்துள்ளோம். எவ்வித அறிவியல் பூர்வமான ஆய்வுகளும் இன்றி, தமக்குத் தேவையான விதத்தில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடந்த காலங்களில் துறைசார் அமைச்சர்கள் அனுமதி வழங்கியமையாலேயே கரைவலை மீன்பிடித் தொழிலில் பிரச்சினைகள் ஏற்பட்டன. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கரைவலைத் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். இன்றும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

முதலில் நாம் இரு மாதங்கள் அவகாசம் கோரினோம். ஆனால், அந்த கால எல்லை போதாது என்பதால், அறிவியல் பூர்வமான தீர்வை வழங்குவதற்கு ஒரு வருட கால அவகாசம் கோரியிருந்தோம். மீனவர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். கடல் வளங்களை நாசமாக்க இடமளிக்க முடியாது. சட்டவிரோத நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது. நாம் கடற்றொழிலாளர்களை ஒருபோதும் கைவிடமாட்டோம் - என்றார். (அ-ம-இ)

## மோட்டார்...

கொண்டிருந்தவேளை, அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள பாதசாரிக் கடவையில் வைத்து அவரை மோதித்தள்ளியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த அதிபர் முதற்கட்ட சிகிச்சைகளைத் தொடர்ந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார். கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## மோ.சைக்கிள்...

வர் பரிதாபமாக உயிரிழந்தார். வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைச்சேர்ந்த வீரவேல் சுத்தானந்தர் (வயது-73) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 5ஆம் திகதியன்று கோவிலுக்குச் சென்ற அவரை, மாவடிச் சந்தியில் வைத்து மோட்டார்சைக்கிள் மோதியுள்ளது. இதன்போது படுகாயம் அடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே, மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## சம்பு...

களும், மருதங்கேணியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்பவர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர். அத்துடன் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறுகளும் ஏற்பட்டன. அடுத்த சில மணிநேரத்தில் தீ இயல்பாக கட்டுக்குள் வந்தது. விஷமிகள் சிலரே சம்பு புற்தரைக்கு தீவைத்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்தசில வாரங்களுக்கு முன்னர் சம்பு புற்தரையில் பரவிய தீ, அங்குள்ள பனைகளிலும் பற்றிப்பிடித்து பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருந்தது. பருத்தித்துறைப் பிரதேசசபையினர் முன்னெடுத்த கடும் முயற்சிக்குப் பின்னரே அந்தத் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100-66)

## காக்கைதீவுக்...

போராட்டத்தின் பின்னரே தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

யாழ்ப்பாணம் காக்கைதீவு குப்பைக் கிடங்கில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து தீவிபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இதைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்விலும், பொதுக்கூட்டங்களிலும் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்ற போதிலும் இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை. இதன் தொடர்ச்சியாக நேற்றும் அங்கு மிகப்பெரும் தீவிபத்து ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை வீதியை கரும்புகை சூழ்ந்ததால் நீண்டநேரமாகப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்குச் சென்று க்டும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் உடனடியாகத் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. நீண்ட முயற்சிக்குப் பின்னரே தீ கட்டுக்குள் வந்தது.

### பொதுமக்கள் போராட்டம்

காக்கைதீவுக் குப்பைக்கிடங்கில் ஏற்பட்ட தீவிபத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வீதிக்கு இறங்கி நேற்று இரவிரவாகப் போராட்டம் நடத்தினார்கள். இதனால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

காக்கைதீவு குப்பைக்கிடங்கில் நீண்டகாலமாக இத்தகைய தீப்பரவல்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் திட்டமிட்டே ஏற்படுத்தப்படுகின்றன. இதன் பின்னணியில் பெரும் மாபியா இயங்கி வருகின்றது. இது தொடர்பில் நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டிய போதிலும் இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை. இத்தகைய சம்பவங்களால் எமது ஆரோக்கியம், வாழ்வுரிமை என்பவற்றுக்குக் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு தடவையும் தீப்பரவல் ஏற்படும்போது எமது மக்கள் இடம்பெயர வேண்டிய கட்டாயத்தை எதிர்கொள்கின்றனர். தற்போதும் இங்குள்ள முதியவர்களையும், குழந்தைகளையும், நோயாளர்களையும் வெளியேற்றியுள்ளோம் - என்றனர். (அ-ம-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலைச் சிற்றுண்டிகளுக்கு தேசிய வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, ஜூன் 24

**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு ஜூன் மாதத்தை தேசிய ஊட்டச்சத்து மாதமாக பிரகடனப்படுத்தி 'ஆரோக்கியமான பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளுக்கான தேசிய வழிகாட்டுதல்கள்' வழிகாட்டியை வெளியிட்டுள்ளது.**

சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில், கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இந்த வழிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களின் அபாயமற்ற ஆரோக்கியமான மாணவர் தலைமுறையை உருவாக்குதல், சுவையான, சத்தான மற்றும் சுகாதாரமான உணவை நியாயமான விலையில் வழங்குதல், ஆரோக்கியமான உணவு குறித்து மாணவர்களிடையே சரியான மனப்பான்மையை வளர்த்தல், முறையான உணவுப் பழக்க வழக்கங்களை உருவாக்குதல், சிற்றுண் டிச்சாலைகளைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதை உறுதி செய்தல் என்பன இந்தப் புதிய வழிகாட்டியின் நோக்கங்களாகும்.

இந்தத் திட்டம் 2070 மற்றும் 2080 ஆம் ஆண்டுகளில் நாட்டின் முதியோர்களாக மாறவிருக்கும் இன்றைய குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## லக்ஷ்மன் யாப்பா; வழக்கு ஜூலையில்

கொழும்பு,ஜூன் 24

முன்னாள் அமைச்சர் லக் ஷ்மன் யாப்பா அபேவர்தன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கின், மேலதிக விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் ரஷாந்த கொடவெல ஒத்திவைத்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி, 17 இலட்சத்துக்கும் அதிக தொகையை அரசாங்கத்துக்கு நட்டப்படுத்தியமை குறித்து முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன உள்ளிட்ட இருவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஏழு வாகனங்கள் விபத்து ஒருவர் பலி; 10 பேர் காயம்

கொழும்பு,ஜூன் 24

கேகாலை, மொலகொட, மங்களகம பகுதியில் தனியார் பேருந்து ஒன்றுடன் ஒன்றன் பின் ஒன்றாக 7 வாகனங்கள் மோதிக்கொண்ட விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த 10 பேர் சிகிக்சை களுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாரதிப் பயிற்சிப் பாடசாலைக்குச் சொந்தமான பல வாகனங்களே இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## உ/த பரீட்சை மதிப்பீட்டாளர்கள் விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 24

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2026 விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக இணையவழியில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை 2026.06.26 ஆம் திகதி வரை நீடிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுப் பணிகளுக்காக இதுவரை விண்ணப்பிக்க முடியாமல் போன பரீட்சகர்களிடமிருந்து கிடைத்துள்ள கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தள முகவரியின் ஊடாக 2026.06.26 ஆம் திகதி வரை இணையவழியில் விண்ணப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அடிப்படைத் தகுதிகளற்ற 58 பேர் சுகாதாரத்தொண்டர்களாக நியமிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்.24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், அடிப்படைத் தகுதிகளில்லாத 58 பேருக்கு, சுகாதாரத் தொண்டர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்திசுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத்தொண்டர்கள் நியமனம் பற்றி அமைச்சர் கேள்வி எழுப்பிய போது, 82 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அடிப்படைத் தகுதி இல்லாத காரணத்தால் 58 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியவில்லை என்று மருத்துவர் சத்தியமூர்த்தி பதிலளித்தார்.

அவர்களின் தகைமை ஏன் பரிசீலிக்கவில்லை என்று அமைச்சர் மீண்டும் கேள்வி எழுப்பிய போது, நான் வெளிநாடு சென்றிருந்த காலத்தில், அப்போது மருத்துவமனையின் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் சி. ஜமுனானந்தவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் பதிலளித்தார். (ச-இ)




## 15 லட்ச யமன்!

முந்தநாள் இரவு. வழக்கம் போல 'வோக்கிங்' போட்டு, அப்பிடியே கிளிநொச்சிப் பொலிஸ் ஸ்ரேசனுக்கு நேரே முன்னால இருக்கிற வெள்ளைக்கோட்டால் றோட்டைக் கடந்து அங்காலிப் பக்கம் போக வெளிக்கிட்டிருக்கிறார் முந்தின பிரின்சிப்பலும் எழுத்தாளருமான கணேசன் சேர். வெள்ளைக்கோட்டில ஆரும் நடந்து போனால், றோட்டில வாற வாகனங்களை நிப்பாட்டி அவைக்கு வழிவிடோணும். அதுதான் சட்டம். அப்பிடி நிக்காமல் போனால் அது பாரதூரமான குற்றம். அதால 'ட்ரைவிங்லைசென்ஸ்' எடுக்கேக்க இந்த வெள்ளைக்கோட்டைப் பற்றித்தான் வடிவாச் சொல்லிக்குடுப்பினம். ஆனால் அதெல்லாம் இப்ப பென்னாம்பெரிய மோட்டச்சைக்கிளை கண்மண் தெரியாமல் ஓடுற மோடுகளுக்கு மண்டையில ஏறாது. இது தெரியாமல் கணேசன் சேர் வெள்ளைக்கோட்டால போனால் ஒண்டும் நடக்காது எண்டு நினைச்சு, காலை வைக்க அப்பிடியே அவரைத் தூக்கியடிச்சுப்போட்டு நடுறோட்டிலையே கவிண்டு கொட்டிண்டிருக்குது ஒரு பெரிய மோட்டச்சைக்கிள். அந்த அடியோடையே மூச்சுப்பேச்சில்லாமல் கணேசன் சேர் றோட்டில விழுந்திட்டார். மோட்டச்சைக்கிளை மோட்டுவேகத்தில ஓடியந்தவங்களுக்கும் காயம். உடனேயே எல்லாரையும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கினம். ஆனால் கணேசன் சேரைக் காப்பாத்தேலாமல் போட்டுது. அவரைச் சாக்கொண்ட அந்த பைக் ஒண்டரை மாசத்துக்கு முதல், கிட்டத்தட்ட 15 லட்சத்துக்கு லீசிங்கில வாங்கினதாம். அவ்வளவு தொகை குடுத்து வாங்கின மோட்டச்சைக்கிள் கிளிநொச்சியின்ர அடையாளமா இருந்தவரைப் பலியெடுத்த யமனா மாறி, இப்ப உருக்குலைஞ்சு போய் நிக்குது.

மற்ற இடங்களை விடவும் இப்ப கிளிநொச்சியிலதான் வாகனங்களை கண்மண் தெரியாமல்,ரேஸ் ஓடுறம் எண்ட பேரில மற்றவையைச் சாக்காட்டுற சம்பவங்கள் கூடிக்கொண்டு போகுது. 2024 நத்தார் நாளில் வெறியில வந்த டிப்பர் மோதி 34 வயது தாயும் குழந்தையும் செத்தவை. 2025 ஜூலை மாசம், பரந்தன் சந்தியில அதேபோல ஒரு குடிபோதை டிப்பரொண்டு 29 வயது இளம் பட்டதாரிப் பெண்ணைப் பலியெடுத்தது.2026 மே மாசம், ரியூசன் முடிஞ்சு வந்த பெடியனை வெறியில பைக்கை ஓடிவந்தவங்கள் மோதி , அவன்ர உயிரை எடுத்தாங்கள். அந்த மாதமே உருத்திரபுரத்தில போதைப்பொருள் பாவிச்ச தறுதலைகளின்ர பைக் மோதி 31 வயது இளம் தாயொராள் செத்தவா . அந்த வரிசையில உந்த மோட்டு மோட்டர்சைக்கிள் ஓட்டக்காரர் இப்ப கணேசன் சேரின்ர உயிரையும் எடுத்திட்டாங்கள். இந்த அக்சிடெண்ட் எல்லாம் நடந்தவுடன எல்லாரும் பேஸ்புக்கிலயும், யூரிப்பிலையும் 'இப்பிடி ரேஸ் ஓடுறவங்களையும், வெறியில ஓடுறவங்களையும் சும்மா விடக்கூடாது' எண்டு பொங்குவினம். பிறகு மறந்திடுவினம். அதுக்குப் பிறகு இன்னொரு அக்சிடெண்ட் நடக்கேக்கதான் அவைக்கு இதைப்பற்றி நினைவு வரும். பிறகு பழையபடி நாள் போக அதுவும் மறக்கும். இப்பிடி நினைக்கிறதும், மறக்கிறதுமாத்தான் இருக்கிறமே தவிர உருப்படியா இப்பிடியான அக்சிடெண்டுகளை நிப்பாட்ட ஒரு வேலையும் செய்யேலை.

இதெல்லாம் ஒவ்வொரு வீட்டிலையும் உணரவேணும். வீட்டில சாப்பிட வழியில்லாட்டியும், இப்பிடி பத்து லட்சம், பதினைஞ்சு லட்சம் எண்டு மோட்டர்சைக்கிள் எடுத்துக்குடுத்து நாங்கள் தானே பிள்ளையளைப் பழுதாக்கிறம். அப்பிடி எடுத்துக் குடுத்தால், "இப்பிடிக் கஷ்டப்பட்டு எடுத்த பைக்கை கவனமா ஓடோணும், அடுத்தவைக்கு என்னால பாதிப்பு வரக்கூடாது" எண்ட நினைப்பு பைக் ஓடுற எல்லாருக்குமே வரோணும். ஆனால் அப்பிடி ஆருமே நினைக்கிறேலை. அடுத்தவைக்கு படம் காட்டவும், ரீல்ஸ் போடவும் றோட்டில பறந்து போறதுதான் இப்பத்த பெடியளின்ர வாடிக்கை. அண்டைக்கொரு தறுதலை மோட்டர்சைக்கிளை ஓடவிட்டிட்டு, தான் மேல நிண்டபடி வித்தை காட்டிக்கொண்டு இதே கிளிநொச்சி றோட்டில போகுது. அதை வீடியோ எடுத்து பெருமையா பேஸ்புக்கிலையும் போடுது.. இப்பிடி வித்தை காட்டுறவை, ரேஸ் ஓடுறவை, வெறியில வாகனம் ஓடுறவை எல்லாவரையும் பிடிச்சு, தண்டம் விதிக்கிறதோட நிக்காமல் அவையின்ர லைசென்ஸை கான்சல் பண்ணிற மாதிரி சட்டம் கொண்டந்தால் தான், உவையின்ர கொட்டம் அடங்கும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# INVITATION FOR BID 2026_02
## OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONE OF LOCAL GOVERNMENT.

The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Assistant Commissioner, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.

Bidding will be conducted through National Competitive Bidding (NCB)

To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"

Qualification's requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding data & Contract Data (Section 5) for SBD 1 Documents.

Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 24/06/2026 to 07/07/2026 during 09:00 hrs and 15:00 hrs.

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application, for Construction of fruit & Coconut market at Kodikamam The Chairman, Chavakachcheri Pradeshiya Sabha,Kodikamam (T.P:021 2050356, email:chavakachcherips1@yahoo.com from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.

Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna on or before 10:30:00 AM as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

Pre-Bid Conference will be held at Conference Hall, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna commencing at 10:30:00 AM as stated in table below.

Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 24/06/2026 To 07/07/2026 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10:30:00 AM on 02/07/2026 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10:30:00 AM on 08/07/2026 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(6)/2/CHPS/PBCG/2026/01 | Construction of fruit & coconut market at kodikamam | 14.46 | 105 | C7, C6 & C5 (Buildings) | 3,500.00 | 145,000.00 | 21/10/2026 | 77Days |

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna.

24-06-2026

# வலயக் கல்வி அலுவலகம் - தீவகம்
## அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட /ஏற்படவுள்ள திகதி |
|---|---|---|---|
| 01 | யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஸ்ட மகா வித்தியாலயம் | Type -II | 2026.05.28 |
| 02 | யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் | Type -II | 2026.05.30 |
| 03 | யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஸ்ட வித்தியாலயம் | Type -II | 2026.08.11 |
| 04 | யா/காரை சுப்பிரமணிய வித்தியாசாலை | Type -III | 2026.06.02 |
| 05 | யா/மண்கும்பான் அ.த.க பாடசாலை | Type -III | - |
| மீள் விண்ணப்பம் கோரப்படும் பாடசாலை | | | |
| 01 | யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க பாடசாலை | Type -III | 2026.01.28 |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.
- Type -II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம் பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் -III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பிரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2026.06.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,குறிகட்டுவான் வீதி, வேலணை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வலயக் கல்விப் பணிப்பாளர்
தீவகம்.

# யாழ்.சர்வதேச விமானநிலையத்தில் நிறுவப்படாதுள்ள நடராஜர் சிலை!
## நடவடிக்கை எடுக்குமாறு சி.வி.கே. சிவஞானம் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்துக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நடராஜர் சிலையை அங்கு முறைப்படி பிரதிஷ்டை செய்வதற்கு, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சி. வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்து கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

அண்மையில் எனது தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், பலாலியில் உள்ள சர்வதேச விமான நிலைய வளாகத்தில் நிறுவுவதற்காக அன்பளிப்பாக வழங்கப்பட்ட நடராஜர் சிலை, இன்னமும் அங்கே உரிய முறையில் நிறுவப்படாது பாதுகாப்புப் பெட்டகத்தில் முடங்கிக் கிடப்பது பற்றி சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையின் கலாசார மற்றும் பாரம்பரியத் தொன்மையை வெளிப்படுத்தும் இந்த முக்கியமான விடயத்தில், தாங்களும் யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் தனிப்பட்ட ரீதியில் கூடுதல் அக்கறையெடுத்து, இந்தச் சிலையை விமானநிலைய முகப்பு வளாகத்தில் நிறுவிடத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என நான் கோரியிருந்தேன். விமானநிலையத்துக்கு வருகைதரும் சர்வதேசப் பயணிகள் மற்றும் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் வகையிலும், இந்தப் பிராந்தியத்தின் பண்பாட்டு அடையாளத்தை நிலைநிறுத்தும் வகையிலும் இந்தச் சிலை பிரதிஷ்டை அமையவேண்டும். எனவே, இந்த விடயத்தில் இனியும் காலதாமதம் செய்யாது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-26)

# பண்ணிசைக் கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரல்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இணையவழிப் பண்ணிசைச் சான்றிதழ் கற்கைநெறியின் ஐந்தாம் அணிக்கு, விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 0776776249 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அறிவித்துள்ளார். (க)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85.00 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்
077 334 1281

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக மூத்த உறுப்பினரும்,
**லிங்கம் கிறீம் ஹவுஸ்** உரிமையாளருமாகிய
அமரர்
**நாகலிங்கம் அப்புலிங்கம்**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைவதுடன்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

யாழ் வணிகர் கழகம்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையில் சிரேஷ்ட
விரிவுரையாளராகக் கடமையாற்றும்
**கலாநிதி அல்பேட் அன்ரனிராஜன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்
**அமரர் யூசை செபமாலை அல்பேட்**
அவர்கள் 21.06.2026 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த
செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் குடும்பத்தினருக்கும். உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புவியியற்றுறை சமூகம்,
யாழ் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.
23.06.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுன் 24

உடுவில் தெற்கு பாலவோடை பழங்கிணற்றடி ஸ்ரீ ஞானபைரவர் ஆலயத்தின், புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.06 மணி முதல் 11.56 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறும். இதன் பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகும். எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

மதிப்பிற்குரிய விஸ்வகுல பெரு மக்களுக்கு,

12.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் நாச்சிமார் கோவில் யாழ்ப்பாணத்தில் சங்கத்தின் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. ஆயுட்கால அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தந்து சமூக வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கவும்.


இதுவரை ஆயுள் அங்கத்துவம் பெறாதவர்கள் 30.06.2026 ற்கு முன்னர் உங்கள் ஆயுள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும்.

அ/இ விஸ்வகர்ம குல சங்கம்
213/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெ.மனோகர்
கௌரவ செயலாளர்
077 236 7494

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
12 . 09 . 1946



விண்ணில்
25 . 06 . 2025

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் இரத்தினசிங்கம்

**"உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர் எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர்" (தி.பா. 91:1)**

அன்னாரின் 1ம் ஆண்டு நினைவுத் திருப்பலி நாளை (25.06.2026) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கெடுத்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படியும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படியும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை

குடும்பத்தினர்

(CS/61707) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 10 . 1945



மறைவு
19 . 06 . 2026

### சிவகாமசுந்தரி அருளையா

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மற்றும் மெல்பேர்ண் அவுஸ்ரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட சிவகாமசுந்தரி அருளையா அவர்கள் 19.06.2026 அன்று மெல்பேர்ணில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் தங்கராசம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் குமாரசாமி - கமலாட்சி - மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், அருளையா (ஓய்வு பெற்ற சிறாப்பர், கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற சிறிதரன், தனபாலசிங்கம், யோகேஸ்வரி, சந்திரமோகன், காலஞ்சென்ற சதானந்தன், அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரிமளம், காலஞ்சென்ற துரைராசா, இராசரெத்தினம், சுமனதேவி, காலஞ்சென்ற தில்லைநாதன், அன்பரசி, ஞானலதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருட்செல்வி (Teacher, Jaffna Hindu Ladies' College), மைதிலி (Co-ordinator for Multicultural Women's Wellness Programs, Canadian Mental Health Association, Toronto), காலஞ்சென்ற மணிவண்ணன், Dr.பவானி (Consultant Physician, Melbourne), செந்தூரன் ( Mechanical Engineer, Melbourne), இளங்குமரன் (Subsea Controls Engineer, Perth) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பேர்ட்டி பனிஸ்ரர் (Deputy Principal, St. Patrick's College, Jaffna) உதயசங்கர் (Electrical & Electronic Engineer, Canada), Dr.பிரதீபன் (General Practitioner, Melbourne), காஞ்சனா (Accountant, CPA), யாழ்திலீபா (Bio Medical Science) ஆகியோரின் அன்பு மாமியும், நிலோஜன் (Manager, Royal Wings Institute)- திருஷா, நிலக்ஷன் ( BSc Nursing graduate, University of Peradeniya), ஷாலினி (Veterinary Medicine Student, University of Peradeniya), நிரா (Environmental Sciences, Trent University), சேரா (Phychology Studies, York University), சமீரன், சுகநயன் ( Bio Medicine, Melbourne University), ஷாரிகா, குணா (Bio Medicine, Monash University), ரமணா, அதியன், நித்திலா, நவிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆத்விக் இன் பாசமிகு பூட்டியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் (26.06.2026) வெள்ளிக்கிழமை காலை 10:30 am - 11:30 am மணியளவில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரிகையின் பின் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.**

Abbey Funerals Chapel, 238 Settlement Road, Thomastown, VIC3074.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: அருட்செல்வி (+94 772 48 7300)
மைதிலி (+141631944 23)
பவானி ( +614107 13317)
செந்தூரன் ( +61432570321)
இளங்குமரன் ( +61433225341)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
17 . 06 . 1969



மறைவு
23 . 05 . 2026

### அமரர் பொன்னுத்துரை சண்முகானந்தன்

**(கருமாரி மோட்டோர்ஸ் முகாமையாளர் - கொழும்பு)**

சுதுமலையாம் பதியில் சீரிய நற்குலத்தில்
பொன்னுத்துரை இராஜலட்சுமி
நற்றவப்பயனால் நானிலம் சிறக்க
உதித்திட்ட நவமணிகளில் ஒரு வைரம்
சிதறி சென்றதுவோ விண்ணகத்தே
"சண்: என அழைக்க நீ இல்லை - தம்பி
சடுதியாய் எம்மை பரிதவிக்க விட்டாய் !
என் விரல் பிடித்து நடந்தவனே ....
எம் மடிமீது வளர்ந்தவனே ....
"கருமாரி மோட்டோர்ஸ்" இல்
முகாமையாளராய் களங்கமில்லா பணி
புரிகையிலே நின் திறமை மேலோங்க
நீங்கா உழைப்பால் இடம் பதித்தாய்.
தலைநகர் கொழும்பிற்கு வந்த உறவுகளின் வழிகாட்டியாக
வழிப்படுத்தி வந்தாய் - ஏணியாய் எப்போதும் நின்றிருந்தாய்
உன்னால் ஏற்றம் கண்டவர் பலர் உளர்
அன்டசன் தொடர் மாடியின் ஒளியொன்று அணைந்ததுவோ
கட்டிய மனையாள், மக்களொடு
உடன் பிறப்புகளும் கதறியே அழுகின்றோம்
உன்பிரிவால் நாம் இங்கு
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனை மண்டியிட்டு வேண்டுகின்றோம்.
உன் ஆத்மா சாந்திபெறட்டும்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**076 747 3248**
**சுதுமலை மத்தி, மானிப்பாய்.**

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரர்கள்.**

(CS/61741) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாகமுடியும். மனதில் உற்சாகம்பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டுவிருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில்சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச் சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் –மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன்–மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**தனுசு:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு மனக்கசப்புகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

# வடக்கில் கண்ணிவெடி அகற்றல் எதிர்காலத் திட்டங்கள் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன் 24

வடக்கு மாகாணத்தில் முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வகையில், எதிர்காலத்தில்முன்னெடுக்கப்பட வேண்டிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் மற்றும் அதற்கான சவால்கள் தொடர்பில், ஹலோ ட்ரஸ்ட், மக் நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநருடன் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள், வடக்கு மாகாணத்தில் இதுவரை ஆற்றியுள்ள அளப்பரிய சேவைகளுக்கு, ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்தார். குறிப்பாகப் போரால் இடம்பெயர்ந்த மக்களின் துரித மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கும், பாதுகாப்பான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் குறித்த நிறுவனங்களின் அர்ப்பணிப்பான பணிகள் மிகப்பெரிய உதவியாக அமைந்திருந்ததை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் சார்பாக இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஹன்னா பிக்டன், செயற்பாட்டு முகாமையாளர் விதுசன் அந்தோனி, சமூகத் தொடர்பு முகாமையாளர் ஏ.அருள்குணசீலன், மக் நிறுவனத்தின் சார்பாக அதன் தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் அண்டி கிரம்ப், வாழ்வாதார நிபுணர் ஹரிஷா, திறன் அபிவிருத்தி நிபுணர் செந்தூரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 24

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்11 நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், பிரசங்கச்சுடர், திருவாசகப்பிரியன் நித்திய பாபுதரனின் "கூத்தன் புறப்பட்ட கூடு" எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

+++

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 58ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத்தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், பிரசங்கபூஷணம், சொற்பெருவேந்தன் செ.த.குமரனின் "அசமுகிப் படலம்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் நடைபெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# சமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, நடத்தப்படவுள்ள சமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களிடையே சமய அறிவையும், அதன் மூலம் ஒழுக்கநெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தால் வருடாந்த மஹோற்சவத்தின் போது நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். எழுத்து மூலம் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் தரம் 3-11 வரையான மாணவர்கள் பங்குபற்றலாம். ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாகப்பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்குள் சேர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை ஆலயத்தின் அருகாமையில் உள்ள கடைகளிலிருந்தோ, அல்லது 0741471759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். இந்தப் போட்டிக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழா அன்று இரவு ஆலயம் முன்பாக நடைபெறும் என்று பரீட்சைக்கான ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (க)

**பணிப் பெண் தேவை**

யாழ் நகரில் 05 பேரைக் கொண்ட வீடொன்றிற்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய 40 - 55 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.
சம்பளம்-75000+உணவு+தங்குமிடம்.
தொடர்புகளுக்கு:
077 937 0000, 075 988 1000

**வேலையாட்கள் தேவை**

திருகோணமலையிலுள்ள மிக உயர்தரமான இந்தியன் Restaurant இல் தங்கியிருந்து வேலைசெய்ய வேலையாட்கள் தேவை.
Restaurant Manager, Restaurant Supervisor, Juice maker
தங்குமிடம், சாப்பாடு, நிறைவான சம்பளம் வழங்கப்படும்.
075 909 8732, 075 909 8738
(CS617702)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் … இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org